# உலகத் தமிழர் குரல்
# ULAKA THAMILAR KURAL

ஒலி - 21 | டிசம்பர் 2002 | இதழ் - 18

திருவள்ளுவர் ஆண்டு 2033 கலி வருடம் 5104 மார்கழி மாதம் சிலை - திங்கள் சஞ்சிகை - 6

அரசியல் கலப்பற்றது *NON POLITICAL*



உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளை ஆட்சிக் குழுவினருடன் இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு.துரை கணேசலிங்கம் அவர்கள் சேர்ந்து எடுத்தபடம் இடமிருந்து வலமாக திரு.மு. ஜெயந்திகுமார், டாகடர் இ. சற்குருநாதன், திரு. சி.வ.ஆறுமுகசாமி திரு. ஆ. சண்முகலிங்கம் (இலங்கைக்கிளைத்தலைவர்) திரு. துரை கணேசலிங்கம் (ஜேர்மனி) பொதுச்செயலாளர், கவிஞர் திரு. செ. பரமநாதன் (பொருளாளா) திரு. இ. தவகோபால் (செயலாளர்) ஆகியோர் காணப்படுகின்றனர்.

அன்பளிப்பு ரூபா 30/=

வெளியீடு :- உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் குரல்

ஆசிரியர், திரு. ஆ. சண்முகலிங்கம்

மார்கழி மாதம் 2002 (டிசம்பர்)

## எண்ணம்

# புலம் பெயர்ந்தோர் நிலைமையும் கடமையும்

மனிதன் தான் வாழும் நாட்டில் வாழ்வியலுக்கு பாதகமான சூழ் நிலையில் செயற்பாடுகள் அமையுமாயிருந்தால் அவன் வேறு இடம் தேடி ஓடிச் செல்லும் கட்டாயமான நிலைமை ஏற்படுகின்றது சில போது தாய் நாட்டைத் துறந்து தப்பிச் செல்லும் ஏது நிலையும் அமையும் அல்லவா? இப்படியானதொரு நிலை இலங்கையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களான தமிழீழப் பகுதியில் 1980 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகியது.

### புலம் பெயர்வுக்கான காரணிகள்

இலங்கையில் வாழ்ந்து வரும் தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீக மக்களாவர் இவர்களுக்கு பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மை கொண்ட பாரம்பரியமான ஆட்சியுரிமையுடன் கூடிய வரலாறு உள்ளது. 400 ஆண்டுகளுக்கு மேல் ஐரோப்பியர்களிடம் உரிமை இழந்து அடிமைப்பட்டுக் கிடந்த இந்த நாட்டுக்கு1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் வழங்கப்பட்டது. சுதந்திர ஆட்சி சிங்களத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டதால் காலப்போக்கில் இரண்டாவது பெரிய இனமாக விளங்கி வந்த தமிழர்களின் உரிமைகளை பறிக்கும் செயல்கள் ஆரம்பிக்கப்பட்டன. முதலில் மலையகத் தமிழ் மக்கள் பத்து லட்சம் பேரின் குடியுரிமை பறிக்கப்பட்டு இவர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.(பிரசாரவுரிமைச் சட்டம் 1949) 1950 ஆம் ஆண்டிலிருந்து கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை இன மக்களுக்கான விவசாய குடியேற்ற நடவடிக்கைகள் துவக்கப்பட்டன. பின்னர் சிங்களம் மட்டும் சட்டம் (1956) ஆக்கப்பட்டதனால் தமிழர்களின் மொழி உரிமை பறிக்கப்பட்டது. தொடர்ந்து வட கிழக்கு பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் தமிழர்களின் பொருளாதார வளத்துக்கு தடைகள் தோற்றுவிக்கப்பட்டன. அரச வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பமும் குறையும் நிலை உண்டானது தமிழர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக்கள் தரப்படுத்தல் சட்டத்தின் (1974) மூலம் மறுக்கப்பட்டு விகிதாசார அனுமதிகள் தோன்றின.

இப்படியாக உரிமைகள் மறுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு வந்தமையால் தமிழ்ர்கள் பல துன்பங்களை அனுபவித்து வரலாயினர் இதனால் தமிழர்கள் உரிமை கேட்கும் அரசியல் எழுச்சிச் செயற்பாடுகள் சாத்வீக முறையில் தொடங்கின. இவற்றைத் தடுக்கவும் தமிழர்களை அடக்கவும் தொடர்ந்து வந்த அரசுகளால் தமிழ்க் கெதிராகச் சட்டங்கள் ஆக்கப்பட்டன (1979) இப்படியான அடக்கு முறைச் சட்டத்தினால் தமிழர்கள் சுதந்திரமாக வாழும் உரிமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கப்பட்டது. இந்த நிலைமை தொடர்ந்து வந்ததால் தமிழ் மக்களின் வாழ்வியல் செயற்பாடுகள் குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டன இதனால் தமிழர்கள் பொதுவாகவும் தமிழ் இளைஞர்கள் குறிப்பாகவும் சந்தேகப் பிரசைகளாக நோக்கப்பட்டு வரலாயினர். தொடர்ந்து சோதனைகளும் தடுத்து வைக்கப்படுதலும் ஆரம்பமானது. இந்தச் செயற்பாடுகளினால் விரக்தியுற்ற இவர்கள் தம்மையும் இனத்தையும் பாதுகாக்கும் நோக்கில் இயக்கங்களில் சேர்ந்து ஆயதம் ஏந்தும் போர்ச் சூழலுக்குள் தள்ளப்பட்டனர். இதே நேரம் இன்னும் பல்லாயிரம் இளைஞர்கள் மேற்கு நாடுகளுக்குத் தப்பிச் செல்லலாயினர். இவர்கள் சென்று சேர்ந்த தேசங்களில் அகதிகளாகப் புகலிடம் கிடைத்து வந்தது.

பொருளாதார வசதியில்லாத மக்கள் 11/2 லட்சம் பேர் வரை அயல் நாடான இந்தியாவுக்கு கடல் வழியாகச் சென்று அகதிகளாக அநேகர் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள். 20 ஆண்டுக்களாக தமிழர்கள் அகதிகளாக நாட்டைவிட்டுத் தப்பிச் செல்லும் நிலைமை தொடர்ந்து வந்தது

**1977 ஆம் ஆண்டிலும் 1983ம் ஆண்டிலும் இலங்கையில் இனக் கலவரங்கள்**

1977, 1983 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் தமிழ் மானிலங்களுக்கு வெளியே வாழ்ந்த தமிழர்களுக் கெதிராக இனக் கலவரங்கள் தூபமிடப்பட்டு நடாத்தப்பட்டன. இதன் போது ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் காவு கொள்ளப்பட்டனர். கோடிக் கணக்கில் இவர்களின் சொத்துக்கள் உடமைகள் அழித் தொழிக்கப்பட்டன. இந்தப் பரிதாப நிலைமையால் இளைஞர்கள் எழுச்சி பெறும் நிலைமை உண்டானது இவர்கள் போராளிகள்ளாக மாறி அரசும் தமிழர்களும் ஆயுதமேந்தி யுத்தம் செய்யும் நிகழ்வுகள் தொடங்கித் தொடர்ந்து வந்தன. இந்தப் போர்ச்சூழல் 20 ஆண்டுகளாக அமைந்து தீவிரமாகி வந்தது 1990 இல் இருந்து உச்சக் கட்டத்தை அடைந்து பத்தாண்டுகள் மேலாக நடந்தது நாட்டில் அளவில்லாத அழிவு நட்டங்கள் ஏற்பட்டு வந்தன இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்து விட்டது. நாட்டை உலுக்க ஆரம்பித்த பொருளாதார நெருக்கடிகள் போரை நிறுத்தும் நிலைக்குத் தள்ளியது. பேச்சுவாத்தையின் மூலமாக தமிழர்களுக்கு உரிமை வழங்கும் நிலைப்பாட்டில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்களுக்கும் இடையில் போர் ஓய்வுப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு நோர்வே தேசம் பேருதவியாக இருந்து செயல் பட்டுவருகின்றது. மேலை நாடுகளும் இதற்கு உதவியாக நடந்து வருகின்றன.

**புலம் பெயர்ந்தோர் நிலைமை**

20 ஆண்டுகளில் மேற்கு நாடுகளில் 05 லட்சத்துக்கு மேல் அகதிகளாகிய தமிழர்கள் புகலிடம் பெற்று வாழ்ந்து வருகின்றனர். இவர்களே புலம் பெயர்ந்தோர் என அழைக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. பொறுப்புடன் செயல்பட கடப்பாடுகளும் உள்ளன. புலம் பெயர்ந்தோர் (தமிழர்கள்) அமெரிக்கா கனடா, மற்றும் ஐரோப்பியா நாடுகளில் வாழ்ந்து வரும் இவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள். இவர்கள் வாழும் நாடுகள் மாறுபாடான கடும் குளிர் சுவாத்தியச் சூழல் அமைந்தவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு மொழிகள் பேச வேண்டிய நிலமை உள்ளது. இவர்கள் வாழ்ந்து வரும் நாட்டு மக்களின் வாழ்வு முறை, கலாச்சாரம், பண்பாடு பழக்க வழக்கங்கள் போன்றவற்றுக்கு முகம் கொடுத்து வாழும் கட்டாயம் அமைகின்றது. மது பானம் அருந்தும் பழக்கம் சாதாரணமானது. பாலியல் இன்ப சுக விடயங்கள் பல வெளிப்படையாகவே நடக்கின்றன. ஆடம்பர வாழ்வு உல்லாசம், போன்றவை மலிந்து விளங்கி வருகின்றன. இவற்றால் புலம் பெயர்ந்தோர். பாதிப்புக்குள்ளாகும் ஏது நிலைகளும் அமைகின்றன.

இத்தகையதொரு பகைப் புலத்தில் நல்ல ஒழுக்க நடைமுறை உயரிய பண்பாடு விளங்கி வரும் நமது நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் அந்தந்த நாடுகளில் பிரச்சினைகளைச் சந்திக்கும் நிர்ப்பந்தம் எழுவது இயல்பானது மனக் கட்டுப்பாடு, இனப்பண்பாடுகளை மறந்து தடம் புரளும் இளைஞர்களும் அநேகர் இருக்கின்றார்கள். இதனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் பலர் வாழ்வியல் சீரழிவுகளுக்கு ஆளாகின்றார்கள் பாதுகாப்பான வாழ்வைத் தேடிச் சென்ற இவர்கள் பண்பாட்டுச் சீரழிவில் வீழ்ந்து வருகின்றார்கள். இதனால் இவர்கள் தாம் சார்ந்த குடும்பங்களை மறந்து அங்கேயே அழிவுறும் நிலைமை தோன்றுமல்லவா? புலம் பெயர்ந்தோரில் நல்லோர் மட்டும் சுயகட்டுப்பாடு பேணி அந்தந்த நாட்டு மொழியைக் கற்று, தொழில் சார்ந்த பயிற்சி பெற்று நல்ல நிலையில் வாழ முடிகிறது. அவ் விடங்களில் அரசாங்க உதவியில் வாழ்ந்திடும் பலர் பொறுப்புணர்வுடன் வாழ்வதால் தாயகத்தில் உள்ள தமது குடும்பங்களுக்கு, உறவுகளுக்கு பணம் அனுப்பி உதவி செய்து அவர்களையும் வாழ வைக்க முடிகின்றது. ஆயினும் புலம் பெயர்ந்து வாழும் கணிசமான தொகையினர் தாய் நாட்டில் வறுமையில் வாடும் குடும்ப உறவுகளைக் கவனிப்பதில்லை தொடர்புறவும் வைப்பதில்லை இதனால் பல குடும்பங்கள் இந்த நாட்டில் துன்ப நிலையில் கண்ணீரில் வாழ்ந்து வருகின்றமை வெளிப்படை .மேலும் அளவுக்கு மீறி உதவி பெற்று வரும் புலம் பெயர்ந்தோரின் குடும்ப உறவுகள் வாழத் தெரியாமல் கண்டபடி ஊதாரித்தனமாக வாழ்வதைக் காணும் போது மனிதாபிமானமில்லாத மடமைப் போக்கை யார்தான் தடுக்க முடியும்.

## புலம் பெயர்ந்தோர் செய்யும் தவறுகள்

புலம் பெயர்ந்து மேலை நாடுகளில் வாழும் பலர் தமது பெற்றோரை தாம் வதியும் நாட்டுக்கு அழைத்து தம்முடன் கூடவே வைத்திருக்கிறார்கள். முதிய பெற்றோர் பலர் அங்கே உள்ள சுவாத்திய சூழல் மாறுபாடுகளால் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையிலிருந்து வருவதைக் காணலாம். பல பெற்றோர் பிள்ளைகள் வாழ்ந்து வரும் மாடி அறைகளில் சிறைப்பட்ட மாதிரி வாடும் நிலைமையும் உள்ளது. இதனால் பல பெற்றோர் தேக சுகம் கெட்டு வாத நோய்க்கு ஆளாகி விடுகின்றார்கள். இன்னும் பலர் தேகம் ஊதுவதால் நடக்க முடியாமல் கஸ்டப்படுகிறார்கள். இந்த விடயங்களால் அவர்களின் ஆயுள் நன்மை குறைந்து வருகின்றது. இப்படியானதொரு பரிதாப நிலமை புலம் பெயர்ந்த பிள்ளைகளின் சிந்தித்து செயல்படாத தவறினால் ஏற்படுவது உண்மையாகும். தாயகத்தில் சுகமாக நிம்மதியாக வாழ வாய்ப்புள்ள பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளால் பாழாகின்றனர். இதன் காரணமாக இவர்கள் பெற்றோரை விரைவில் இழந்து விடும் துன்ப நிலையும் ஏற்பட்டு விடுகின்றது.

## துன்பத்தில் வாழும் புலம் பெயர்ந்த மக்கள்

புலம் பெயர்ந்து வாழும் இளைஞர்கள் அநேகமானோர் ஓய்வின்றி உழைக்க வேண்டியிருக்கின்றது. உணவை நேரத்துக்கு உண்ண முடியாமல் உடல் நலத்தை படிப்படியாக இழந்தும் வருகிறார்கள். பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, டென்மார்க் சுவீடன் சுவிஸ் போன்ற நாடுகளில் வாழ்க்கைச் செலவினங்களை சமாளிப்பதற்கு ஓடி ஓடி உழைத்து வேலை செய்ய வேண்டிய அவசியமிருப்பதால் நமது மக்கள் இளமையில் முதுமையை அடைகின்றார்கள். பலர் உழைப்பால் வரும் வருமானத்தை மீதம் பண்ண முடியாமலும் கஸ்டப்படுகிறார்கள். பலரிடம் சேமிக்கும் பழக்கமிருப்பதில்லை கணிசமான தொகையினர் மதுப் பழக்கம் போதைப் பொருள் பயன்பாடு போன்றவற்றில் வீழ்ந்து தம்மை அழித்துக் கொள்கின்றார்கள். வன்முறைகளில் ஈடுபடும் நிலையில் சிலர் சிறையிலும் பல ஆண்டுகள் வாடும் நிலையும் உள்ளது. வாழ்வில் ஒழுங்காக வாழத் தெரியாமல் செயற்படும் ஆட்களை நாட்டைவிட்டு வெளியேற்றிவிடும் நடமுறையும் அந்த நாடுகளில் உள்ளன.

அகதி நிலையில் பல ஆண்டுகளாக வாழ்ந்த நல்லோர் சிலர் அந்தந்த நாட்டில் குடியுரிமை பெற்று விடுவதால் ஓரளவுக்கு நிம்மதியாக வாழ முடிகின்றது. மற்றவர்கள் தம்மை தாயகத்திற்கு கப்பலேற்றி அனுப்பி விடுவார்களோ என்ற பயப் பீதியிலும் இருக்கின்றார்கள். இந்த நாட்டில் நிரந்தரமான சமாதானம் தோன்றி மக்கள் நிம்மதியான சூழ்நிலையில் வாழ நாட்டில் ஆட்சி நிர்வாகம் எதிர் காலத்தில் தோன்றும் போது 02,03 ஆண்டுகளில் அகதி மக்கள் பலர் தாயகத்துக்கு திரும்பி வரவேண்டிய கட்டாயமான நிலைமை ஏற்படுமென்பது திடமானது இந்த நிலைபரம் அமையும் போது பல இளைஞர்கள் வெறுங்கையோடு இலங்கை வந்து சேர வேண்டி வரலாம். இவர்கள் தம்முடைய குடும்பங்களுக்கு சுமையாகவும் அமையக் கூடும்மல்லவா? புலம் பெயர்ந்த நமது மக்கள் தமது உழைப்பினால் வரும் செல்வத்தை தாயகத்துக்கு அனுப்பிச் சேமிப்பதால் பல மடங்கு நன்மையடைய வாய்ப்புள்ளதை அநேகர் சிந்திக்காமல் இருப்பது பெருங் குறையாகும்.

## புலம் பெயர்ந்தோர் குடும்ப நிலை

குடும்பங்களாக வாழும் புலம் பெயர்ந்த நம்மவர்கள் கணவன், மனைவி இருவரும் அங்கே வாழ்க்கைச் செலவை ஈடு செய்வதற்கு பல வகையான வேலைகள் செய்து உழைத்து வருமானம் பெறுவது தவிர்க்க முடியாதது. இவர்களின் பிள்ளைகளுக்கு தாய் மொழிப் பிரச்சினை ஏற்படுகின்றது. இவர்கள் எந்த நாட்டில் பிறந்து வாழ்கின்றார்களோ அந்த நாட்டின் மொழியை அறிந்து படிக்கும் விடயம் அமைந்து வருகின்றது. இதனால் பிள்ளைகள் கற்கும் மொழி பெற்றோருக்கு புரியாத நிலையும் உண்டாகின்றது. இவர்களுக்கு தாய் மொழியான தமிழ் தெரியாமல் போய் விடுகின்றது. பெற்றோருக்கு தாய் மொழியை படிப்பிக்க பழக்க நேரம் இருப்பதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிள்ளைகள் அந்த நாட்டில் தங்கி விட்டால் இவர்கள் அந்த தேசத்தின் மொழியைப் பேசி அங்கே உள்ள சமூகங்களுடன் சங்கமமாகி விடுகின்றார்கள் இதனால் தாயகத்துடன் தொடர்பும் விடுபட்டு விடும் என்பது உண்மையாகும்.

## தாய் மொழி, பாரம்பரிய சமய, கலாச்சார நிலைமை

புலம் பெயர்ந்த நம் மக்களில் சிலர் சைவக் கோவில்களை அமைத்து சமயப் பண்பாட்டினை வளர்த்து வருவது பாராட்டிப் போற்றப் பட வேண்டியதாகும். இது தாய்நாட்டுப் பண்பாட்டு விடயங்கள் பாதுகாக்கப்படுவதற்கு உறுதுணை செய்யும். நமது மொழியில் பற்று அபிமானம் உள்ள சில மக்கள் தாம் வதியும் நாடுகளில் ஒன்றிணைந்து தமிழ்ச் சங்கங்கள் அமைத்து தமிழ்ப் பணி ஆற்றி வருவதையும் காணலாம். ஆர்வமுள்ள தமிழ்ச் சிறார்களுக்கு தமிழ் மொழியை கற்பிக்கும் அருந்தொண்டினை இவர்கள் செய்து வருவது புகழ்ந்து சீராட்ட வேண்டியது ஒன்றாகும். தமிழ் மொழியை கற்பிக்க ஏற்பாடு செய்துள்ள கனடா, அவுஸ்திரேலியா அரசுகள் பாராட்டுக்குரியவையாகும். தமிழர்கள் தமிழைக் கற்க முடியாத சூழ்நிலையும் சில நாடுகளில் உள்ளன இதனை நமது மக்களே முயற்சி செய்து படிப்பித்தல் சாலச்சிறந்ததாகும். தமிழர்கள் வாழும் நாடுகளில் தமது வீடுகளில் தமிழைப் பேசி பயன்படுத்தி வளர்ப்பதன் மூலமாகவும் நாம் தொண்டு செய்ய முடியுமல்லவா?

## புலம் பெயர்ந்த தமிழர்களின் கடமைப்பாடுகள் என்ன?

நமது பாரம்பரிய நிலப்பகுதி இந்த நாட்டில் பரந்து கிடக்கின்றது. நமது தாய் மொழியும், பண்பாடும், கலாச்சார விழுமியங்களும் இங்கே நிலவி வருகின்றன. போர் அனர்த்தங்களால் அழிவுற்று சிதைந்து கிடக்கும் நமது மண்ணில் 15 லட்சம் மக்கள் வரை வாழ்ந்து வருகின்றனர். நமது நாட்டில் நமது தாய் மொழிப்பற்று குறைந்து வருகின்றது. தமிழ் மாந்தர்கள் பலர் தமிழ் வளர்க்கும் ஆர்வமின்றி இருக்கின்றார்கள் தமிழ் நூல் ஆக்கங்கள் குறைந்து விட்டன. தமிழ் வளர்க்கும் சங்கங்கள் இயங்குவதில்லை பள்ளிக்கூடங்களில் தமிழ் முறையாக ஊக்கமாகக் கற்பிக்கப் படுவதாக இல்லை மாணவர்கள் தகுதிச் சான்றிதழ் தேவைக்கு மாத்திரமே தமிழைப் படிக்கின்றார்கள் மொழி அறிவையும் தகுதியையும் திறமையாக்கும் நோக்கம் காணமுடியவில்லை. மாணவர்கள் தொழில் வருமான வாய்ப்பைப் பெறுவதையே நோக்கமாகப் பலர் இருக்கின்றார்கள். தமிழை வளர்க்கப் பாடுபடும் தொண்டு செய்யும் ஆர்வம் ஆசிரியர்களிடம் அருகி வருகின்றது. 1960 இல் இருந்து 1975 வரை நம் நாட்டிலிருந்து வந்த தமிழ் வளர்ச்சிக்கான ஆர்வம் தற்போது இல்லை. காரணம் தமிழ் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாசிக்கும் பற்றுதல் அருகி வரும் நிலை உள்ளது. இந்த நிலை தொடருமாயிருந்தால் தமிழ் வளர்ச்சி குன்றும் என்பது உண்மை. மொழிப் பற்று மறக்கப்படும் இந்த நிலையிலிருந்து தமிழ் வளர்ச்சிக்கான முயற்சிகள், செயற்பாடுகள் தோற்றம் பெறுதல் கவனமெடுக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

இதனை செய்வதாயின் தமிழ் வளர்க்கும் நிறுவனங்களுக்கு வேண்டிய நிதி உதவி கிடைக்க வழி செய்வது சாலவும் பயனுள்ளது. இன்று தமிழ் வளர்க்க முன்னிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களில் ஒன்றாக நமது அமைப்பு 25 ஆண்டுகளாகச் செயல் கண்டு வருகின்றது. சோம்பித் தூக்கத்திலிருப்பவர்களை தட்டி எழுப்பி வருகின்றதைப் பலர் அறிவார்கள். எமது நிறுவனத்துக்கு நிதி உதவி வழங்க ஆர்வமுள்ள பணம் படைத்த புலம் பெயர்ந்த தமிழ் அன்புள்ளங்கள் முன் வரவேண்டும் இங்கே தமிழ்ப் பணி செய்யும் மற்ற நிறுவனங்களையும் இனங்கண்டு கொண்டு நமது அமைப்பு துணை நின்று ஆதரவளிக்கும். தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கு கடந்த 30 ஆண்டு காலப் பகுதியில் அரச உதவிகள் கிடைக்க வாய்ப்பிருக்கவில்லை.

இந்த நிலையில் தாயகத்தில் தமிழ் மொழி கற்க, கற்பிக்க, தமிழ்ப் பேச்சை வளர்க்க இவற்றைப் பரப்பிட பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது. உள்நாட்டில் தமிழ் மீது பற்று மிக்க செல்வச் சீமான்களும் நமது அமைப்பின் செயற்பாடுகளுக்கு நிதி உதவி செய்ய வேண்டு என்று எதிர்பார்க்கின்றோம். ஆறுமுக நாவலர் பெருமான் சைவத்தையும்; தமிழையும் வளர்த்துக் காப்பாற்றினார். விபுலானந்த அடிகள் தமிழை வளர்க்கும் பணியை ஆற்றினார். திரு.சி.வை தாமோதரம்பிள்ளை, வண. தனிநாயக அடிகளார் போன்ற சில பெருமக்கள் தமிழ் மீது பற்று வைத்து பணி செய்து வந்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் தம்முடைய சொந்தமான செல்வங்களை தமிழுக்காகச் செலவிட்டிருக்கின்றார்கள். இவர்களைப் போன்ற செம்மான்கள் இந்த நிலத்தில் உருவாக காலத்தின் தேவை கண்டு தமிழ் வளர்க்கும் மாந்தர்களை ஊக்கமளித்து உதவி தந்து அரவணைக்க வேண்டும். இதற்கு புலம் பெயர்ந்த மக்களின் உதவிப் பணிகள் நற்பயன்கள் விளைவிக்குமென்பது வெள்ளிடை மலை எனலாம்.

ஆகவே புலம் பெயர்ந்த நம் மக்களில் நன் மக்களின் சிந்தனைத் தெளிவும் சமுதாய முன்னேற்றம் பெற அமையும் நன்னோக்கும் நம் மொழி வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் சிறப்பான துணை புரியுமென்பதில் ஐயமில்லை.

எனவே தமிழ் வளர்க்கப்பட தமிழ் மண்ணில் தமிழ் மணம் தென்றலாக வீசி வர நிதி உதவி செய்து ஊக்கமளிப்பதால் உதவிக்கு வரும் புரவலர்கள் வரலாற்றில் இடம் பெறுவார்கள் என்பது நிச்சயமாகும். வாழ்க தமிழ்!

*-ஆசிரியர்-*

**உலகத் தமிழர் குரல்**

*எமது சஞ்சிகைக்கு தமிழ் மொழி தமிழ்ப் பண்பாடு வரலாறு தமிழ் இலக்கியம் தமிழர் வாழ்வியல் தொடர்பான ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வரவேற்கப்படுகின்றன. இதனால் உங்களின் எழுத்தாற்றல் வளர ஏது நிலை உண்டாகும்.*

-ஆசிரியர்-

**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**
இலங்கைக் கிளை முகவரி:
*பரமநாதன் இல்லம்,*
*மானிப்பாய் வீதி, தாவடி,*
*கொக்குவில்.*
*இலங்கை.*
T.P. 0094-21-3294



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாடு 2004 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடக்கும்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஒன்பதாவது உலகத தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டை இலங்கையின் யாழ்ப்பாணத்தில் 2004 ஆம் ஆண்டில் ஆவணி மாதத்தில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. 17.09.2002, 26.09.2002 ஆகிய நாட்களில் கூடிய இலங்கைக் கிளையின் ஆட்சிக் குழுக் கூட்டங்களில் இது விடயம் ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டங்களில் பொதுச் செயலாளர் திரு. துரை கணேசலிங்கம் (ஜேர்மனி) அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். மகாநாடு தொடர்பாக அலுவல்களை 2003 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து இலங்கைக் கிளை ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று நாட்கள் நடக்கும் இந்த மகாநாடு கலாச்சார நிகழ்வுகளுடன் வெகு சிறப்பாக அமையவுள்ளது. இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, தூர கிழக்கு நாடுகள், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவற்றிலிருந்து பேராளர்கள் இந்த மகாநாட்டுக்கு வருகை தருவார்கள் நமது நாட்டின் பிரபலமான தலைவர்கள் மகாநாட்டுக்கு அழைக்கப்பட விருக்கிறார்கள்.

மகாநாட்டில் முதலாம் நாளில் தமிழ் ஆய்வு மகாநாடு, இரண்டாம் நாள் கலாச்சார மகாநாடு, 3ம் நாள் பொது நிகழ்வு மகாநாடு என்ற அடிப்படையில் அமையும் மகாநாட்டைச் சிறப்பிக்க யாழ் நகரை அண்டிய நகரங்களில் கலாச்சார நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படும் இந்த மகாநாட்டுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பொது நிறுவனங்கள் உதவி ஒத்தாசை வழங்க விருக்கின்றன .

மகாநாட்டின் கருப் பொருள் "தமிழால் வாழ்வோம் தமிழ் மண் வளம் சேர்ப்போம்" என்பதாக இருக்கும். இந்த உலக மகாநாடு தொடர்பாக சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும். பல்லாண்டு காலமாக தமிழ் வளர்ச்சிப் பணி செய்து வரும் தமிழ் அறிஞர்கள் 100 பேர் விருதுகளும் பட்டங்களும் வழங்கி கௌரவிக்கப்பட விருக்கின்றார்கள். மகாநாட்டில் தமிழ் நூல்கள் ஏடுகள் சஞ்சிகைகள் ஆகியவற்றின் கண் காட்சி ஒன்றும் இடம் பெறவுள்ளது. மகாநாடு சிறப்புடன் அமைய யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பேராசிரியர்கள் உறுதுணையாக இருந்து செயல்பட விருக்கின்றார்கள்.


உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
இணைய தளம்
**WWW/ IMTCWEB/ COM**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ.த.ப இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. துரை. கணேசலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களுடன் சந்திப்பு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு துரை கணேசலிங்கம் (ஜேர்மனி) அவர்கள் சென்ற புரட்டாதி மாதத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இங்கே இலங்கைக் கிளையின் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களுடன் இணைந்து இயக்கத்தின் பணிகளை மேற்கொண்டார். இரு பிரமுகர்களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குச் சென்று துணை வேந்தர் திரு.பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் மற்றும் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் திரு அ. சண்முகதாஸ் அவர்கள் இருவரையும் சந்தித்து பேசினார்கள். (தொடர்ச்சி அடுத்த பக்கம்)



உ.த.ப இயக்கப் பிரமுகர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களைச் சந்தித்த போது எடுத்த படம் இடமிருந்து வலமாக திரு. சி.வ.ஆறுமுகசாமி , திரு. துரை கணேசலிங்கம் (ஜேர்மனி), பேராசிரியர் திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் (துணைவேந்தர்), திரு, ஆ. சண்முகலிங்கம், தலைவர், உ.த.ப இயக்க இலங்கைக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் உலகளாவிய மேனிலைத் தமிழ் கல்வி மையத்தின் கல்விப் பணிகளுக்கு ஆலோசனை வழங்கியுதவுமாறு மேற்படி பேராசியர்களிடம் கோரிக்கை விடப்பட்டது. இந்த உலகளாவிய மேனிலைத் தமிழ் கல்வி மையத்துக்கு ஆலோசனை குழு உறுப்பினர்களாக செயற்படுவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தார்கள்.

தென்னாபிரிக்காத் தமிழர்களின் தமிழ்க் கல்விச் செயற்பாட்டிற்கு உதவும் வகையில் எதிர்வரும் மாதங்களில் தென்னாபிரிக்காவில் இடம் பெறவிருக்கும் மேனிலைக் கல்வி மகாநாட்டுக்கு வருகை தருவதாகவும் பேராசிரியர் திரு.அ. சண்முகதாஸ் அவர்கள் சம்மதம் தெரிவித்தார். அந்த மகாநாட்டில் தென்னாபிரிக்காவில் தமிழ் மாணவர்களுக்கான கல்விக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அவர் வழங்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தருடனான சந்திப்பின் போது உலகளாவிய மேனிலைத் தமிழ்க் கல்வி மையத்துக்கு ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு துணைவேந்தர் அவர்கள் இசைவு தெரிவித்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் நடாத்தி வரும் தமிழ் மாணித் தேர்வுகளான பீ.ஏ இளங்கலை மாணி, எம்.ஏ. முதுகலை மாணி, பி.எவ்.ஏ நுண்கலை மாணி ஆகியவற்றை ஐரோப்பாவில் வாழும் தமிழ் மாணவர்கள் எழுதிப் பட்டங்கள் பெறுவதற்கு உதவும் படி துணை வேந்தர் அவர்களிடம் உ.த.ப இயக்கத்தின் இரு பிரமுகர்களும் கேட்டுக் கொண்டனர். அதனை ஏற்றுக் கொண்ட துணை வேந்தர் அவர்கள் இது தொடர்பான அனுமதி விடயங்களை யாழ்பல்கலைக் கழக செனட்டில் மேற் கொண்ட பின்னர் மானியக் குழுவிலும் அனுமதி பெற வேண்டு மெனவும், இறுதியாக அரசாங்கத்தின் அனுமதியையும் பெற்றதன் பின்னர் அந்தப் பரீட்சைகளை ஐரோப்பாவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உதவியுடன் நடாத்த ஒழுங்கு செய்து தருவதாகவும் துணைவேந்தர் அவர்கள் உறுதியளித்தார். இது விடயம் பேராசிரியர் திரு.அ. சண்முகதாஸ் அவர்களுடனும் பேசப்பட்டு அவரும் இதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து தருவதாகவும் கூறினார்.

2004 ஆம் ஆண்டு ஆவணியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 09 ஆவது உலக மகாநாட்டுக்கு எல்லாவித உதவிகள் வழங்குவதாகவும் இரண்டு பேராசியர்களும் உறுதி மொழி வழங்கியுள்ளனர். மேற்படி சந்திப்புக்கள் 17.09.2002, 19.09.2002 ஆகிய நாட்களில் நடைபெற்றன. துணைவேந்தர் அவர்களுடனான சந்திப்பில் திரு.சி.வ ஆறுமுகசாமி அவர்களும் கலந்து கொண்டார்.

## தென்னாபிரிக்காவில் தமிழ் மேனிலைக் கல்வி மகாநாடு 2003 ல் நடக்கும்

*உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உலகளாவிய மேனிலைத் தமிழ்க் கல்விமையம் எதிர்வரும் ஆண்டில் பங்குனி மாத நடுப்பகுதியில் தென்னாபிரிக்காவில் தமிழ் கல்வியை ஒழுங்கமைக்க தென்னாபிரிக்காத் தமிழ்க் கல்வி மகாநாட்டினை நடாத்த ஏற்பாடு செய்து வருகின்றது. இந்தத் தமிழ்க் கல்வி மகாநாடுக்கு உலகளாவிய ரீதியில் தமிழ்க் கல்வி மான்கள் சென்று கலந்து கொள்ளவுள்ளனர். இலங்கையிலிருந்து யாழ்ப்பாண பல்லைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு.பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்களும் யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. அ.சண்முகதாஸ் அவர்களும் அழைக்கப்படவுள்ளனர். மேற்படி கல்வி மகாநாட்டின் மூலமாக தென்னாபிரிக்காவில் உள்ள இருபதினாயிரம் (20000) தமிழ் மாணவர்கள் தமிழ்க் கல்வியை பெறும் வாய்ப்பினை அடையவுள்ளனர். இந்த மகாநாட்டுக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தென்னாபிரிக்கா கிளை தேவைப்படும் உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேமதுரத் தமிழோசை

## கவிஞர் - செ. பரமநாதன்

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்னும் உயரிய கொள்கைளை உலகிற்கு அளித்த இனம் தமிழ் இனமே! இந்தக் கொள்கையைப் புறநானூறு வலியுறுத்துகின்றது. தேமதுரத் தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும். என்பது பாட்டுக் கொரு புலவன் பாரதி விடுத்துள்ள ஆணையாகும். பொதிகை மலையிலிருந்து புறப்பட்ட தமிழை, மண்ணிய மூவேந்தர் தம் மடிமீது வளர்த்த தமிழை, மண்ணுலகம் எல்லாம் அறிமுகப்படுத்தவும், பரந்து பட்டு வாழும் தமிழர்கள் அனைவரையும் ஒரு முகப்படுத்தி மொழி, பண்பாடு வளரப் பாடுபடுவதோடு, தமிழ் உணர்வோடு ஒன்றுபடுவோம் என்று சபதம் எடுத்துக் கொள்வோம்.

தமிழர்கள் தங்களுடைய மொழியின் தொன்மையையும், நாகரீக வளர்ச்சியையும், பண்பாட்டு மேம்பாட்டினையும், கலை கலாச்சாரச் செறிவுகளையும், காவியச் சிறப்புகளையும் உலகிற்கு உணர்த்த வேண்டியவர்களாகிய நாம் அடிமைகளாய் வாழ்ந்திடுதல் நன்றோ. என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருவள்ளுவர் தமது திருக்குறளில் அகரத் தமிழே ஆதியில் தோன்றியது என்றார். மொழிகளுக்கு எல்லாம் மூத்தது தமிழே! உலகத்தின் உருவாக்கம் போல் ஏழு கோள்கள் தோன்றிய பிரபஞ்சத்தின் ஆதி முதல்வனான பகலவனே ஞாயிறு. இதனாற்றான் பிரபஞ்சத்தில் உயிர்கள் தோன்றின.

அண்டமும் பிண்டமும் கண்டவர்கள் தமிழர்களாவர் இதனை முதலில் உலகில் தோற்றுவித்தவரும் உலகில் பரப்பியவர்களும் அவர்களே! தமிழே முதன்மை பெற்று சைவத்தமிழ் பரப்பி இறைமையை உலகில் வளர்த்தனர். தமிழ் அறம், தமிழ் நீதி, தமிழ்ப் பண்பாடு என்பனவற்றை பரப்பியும் வளர்த்தும் வாழ்ந்த வாழ்வு எம்முடையதாகும்.

அறிவியல் மொழியான தமிழுடன் அகப்புற வாழ்க்கை நெறிகளை வகுத்த தமிழினம், நெறிகெட்டுத் தறிகெட்டுப் போனதேன்? எப்படி இந்த அவலம் ஏற்பட்டது.? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் தமிழரின் வாழ்க்கையில் பின்னிப் பிணைகின்றது. தமிழரின் வரலாற்றுடன் தொடர்புடைய தொல்காப்பியம் சிலப்பதிகாரம், திருக்குறள், போன்ற நூல்களைக் கற்காத தமிழர்களும் இருக்கிறார்களே என்று நினைகின்ற போது மனம் வருந்த வேண்டியுள்ளது.

ஈழத்தைத் தாயகமாகக் கொண்டோர் தமிழக மண்ணில் உள்ளோர், மலேசியாவில் பல ஆண்டுகள் வாழ்வோர் மாத்திரமல்ல உலகில் பல கண்டங்களில் வாழ்வோர், தனியாகவோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு குழுவாகவோ அல்லது தேசிய இனமாகவோ உலகில் வாழ்கின்ற தமிழர்களும் தமிழர்கள் தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்படி கடல் கடந்து வாழும் தமிழர்களின் குடிசன மதிப்பீடு கிடைக்காத போதும் 41/2க் கோடி மக்கள் என்று கணக் கெடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய தமிழர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சி பண்பு நெறி பற்றிய பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பாகும். பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டு என்றால் தனியாகவோ அல்லது சிறு குழுவினரால் எதையும் சாதிக்க முடியாது.

இந்த நிலையை உணர்ந்து செயற்படும் தாபனம் ஒன்று தான் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமாகும் உலகமெங்கும் உள்ள தனது 50 க்கு மேற்பட்ட கிளைகளால் உபயோகமான பல திட்டங்களைத் தீட்டி சாதனை புரிந்து வருகின்றது. வெள்ளி விழாவைக் கொண்டாடிய இவ் இயக்கத்தில் உலகத் தமிழ் மக்கள் அனைவரும் இணைய வேண்டும். உலகில் வாழும் தமிழர்கள் தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

*வாழ்க தமிழ்! வளர்க நமது பண்பாடு.!*

## உ.த.ப இயக்க நோர்வேக் கிளைத் தலைவரின் இலங்கை வருகை

*சென்ற ஆடி மாதத்திலும் புரட்டாதியிலும் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நோர்வே நாட்டுக் கிளையின் தலைவர் திரு.சு. தியாகலிங்கம் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தார். அவரின் இரு பயணங்களின் போதும் யாழ்ப்பாண மாநிலத்துக்கு வருகை தந்த இவர் இங்கே உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் ஆட்சிக்கு குழுவினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். நோர்வேயில் தமது கிளை செய்து வரும் பணிகள் எதிர்காலத் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். இலங்கைக்கிளை பல ஆண்டுகளாக ஆற்றி வரும் தமிழ்ப் பணிகளின் விபரங்களை, கிளைத் தலைவர் திரு.ஆ சண்முகலிங்கம் எடுத்துரைத்தார்.*

*இலங்கைக் கிளையின் பணிகள் வெற்றி பெற நோர்வேக் கிளை நிதி உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்தக் கலந்துரையாடலுக்கு இலங்கைக் கிளைத் தலைவர் திரு.ஆ. சண்முகலிங்கம் தலைமை வகித்தார். இலங்கைக் கிளை மேற்கொண்டுவரும் தமிழ்க் கல்விப் பணிகளை தாமும் நோர்வேயில் முன்னெடுக்க விரும்புவதாகவும் திரு.சு. தியாகலிங்கம் கூறினார். கூட்டத்தில் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் திரு.சி.வ ஆறுமுகசுவாமி, திரு.செ.பரமநாதன் திரு.எஸ் பொன்னம்பலம் திரு.இ. தவகோபால் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திரு.சு. தியாகலிங்கம் அவர்கள் சென்ற ஆண்டு தென்னாபிரிக்காவுக்குச் சென்று உ.த.ப. இயக்கத்தின் 8வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டிலும் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கரிய செய்த செந்தமிழ் ஞாயிறு

**தமிழியப்பாவலர். கதிர்.முத்தையன்**

**உ.த.ப இயக்கப் பேராளர் - கடலூர்-1**

மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் தென் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரநயினார் கோவிலையடுத்த படைவளி என்னும் சிற்றூரில் 07.02.1902 இல் பிறந்தார். இவரின் பெற்றோர் திரு. ஞர்னமுத்தர்- பரிபூரணத்தம்மையார்.

தேவநேயர் 5ஆம் அகவை (வயது)யில் தம் பெற்றோரை இழந்தார். தம் மூத்த தமக்கையாரின் அரவணைப்பில் யங்கு என்னும் துரைமகனாரின் உதவியுடன் உயர் நிலைக் கல்வியை முடித்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பண்டிதர் தேர்விலும் திருநெல்வேலி தமிழ்ச் சங்கத்தின் புலவர் தேர்விலும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் வித்துவான் தேர்விலும் வெற்றி பெற்றார். பல்கலைக்கழக முதுகலை (MA) பட்டமும் பெற்றார். தமிழாய்வில் ஈடுபட வேண்டும் என்னும் விருப்புடன் 23 மொழிகளை இலக்கணத்துடன் கற்றுத் தேர்ந்தார்.

நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் 25 ஆண்டுகள் தமிழ் கற்பித்தார். 12 ஆண்டுகள் சேலம் நகராண்மைக் கல்லூரியில் தமிழ்த் துறை தலைவராகப் பணியாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசியராக 5 ஆண்டுகள் பணிசெய்தார். தமது தமிழ் ஆய்வின் மெய்நெறி அங்குப் போற்றப்படாத சூழலில் தாமே அங்கிருந்து வெளியேறினார். அதனால் வறுமையில் வாடிய போதும் வளர் தமிழுக்குத் தொடர்ந்து தொண்டு செய்தார். பாவாணரை 1974 இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் நெறியாளராக (இயக்குனர்) தமிழக அரசு பணியில் அமர்த்தியது. 15-1-1981ல் இயற்கை எய்திய நாள் வரை இப் பணியைத் தொடர்ந்து செய்தார்.

தமிழ் ஆய்வில் ஈடுபட்டு இடைவிடாது ஓய்வின்றி உழைத்தார்.40ற்கு மேற்பட்ட ஆய்வு நூல்களை படைத்தளித்தார். பன்மொழிப் புலமையுடன் இசைப்புலமையும் உடையவராகப் பாவாணர் திகழ்ந்தார். தமது 53 ஆண்டு கால ஆய்வின் முடிவாக,

1. தமிழே உலகின் முதல் மொழி
2. தமிழரின் பிறந்தகம் குமரிக்கண்டமே!
3. தமிழ் திராவிட மொழிகளுக்குத் தாயாகவும் இந்திய மொழிகளுக்கு மூலமாகவும் விளங்குகின்றது.

என்று உறுதிபட நிறுவினார். தமிழ் மொழியின் தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை ஆகிய 16 பண்புநலன்களையும் பார் போற்ற விரிவாக எடுத்துரைத்தார். மொழித் தூய்மையே தமிழ் மொழியின் உயிர் நாடியாக விளங்குவதைக் கண்டறிந்து எடுத்துரைத்தார். மொழித் தூய்மையைத்தம் பேச்சாலும், எழுத்தாலும் வலியுறுத்தினார்.

மொழியியல் ஆய்வுகளுடன் வரலாற்று ஆய்விலும் பாவாணர் ஈடுபட்டார். குமரிக்கண்டம் கடல் கோளால் அழிக்கப்பட்ட பின்னர் குமரிக்கண்டத்தினின்று பிரிந்த சிறு பிரிவே (தீவே) இன்றைய இலங்கை யாகும். என்று பாவாணர் இலங்கைத் தீவின் தோற்றம் பற்றிய வரலாற்றினை மிகத் தெளிவாக விளக்குகின்றார். எனவே குமரிக் கண்டத்தில் வாழ்ந்த தமிழரின் ஒரு பிரிவினரே தொடக்கக் காலம் முதல் இலங்கையின் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்கள் என்ற வரலாற்றுண்மையை உறுதி செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக் காலத்தில் வேற்று மொழியாளர்களின் ஆட்சியில் தமிழ் நாட்டில் தமிழரின் தனித் தன்மை குன்றியது. இனிய தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலந்தன. தமிழ் வட மொழியின் வல்லாண்மை ஓங்கியது. பிறப்பு மறைந்து ஜனனம் வந்தது, இறப்பு - மரணம், என்றும் அறம் - தருமம் என்றும், சோறு- சாதம் என்றும், சாறு - ரஜம் என்றும், மொழி - பாஷை, என்றும் தலை, சிரம், என்றும் கை,கரம் என்றும் தொள், புஜம் என்றும் கண்-நேத்திரம் என்றும், உடல்-திரேகம் என்றும் உடை, வஸ்திரம் என்றும், வீடு - கிரகம் என்றும் பிற மொழிச் சொற்களால் வழங்கப்பட்டலாயின.

இவ்வாறு தமிழ்ச் சொற்கள் புறம் தள்ளப்பட்டு, பிற மொழிச் சொற்கள் கோலோச்சத் தொடங்கியதால் இனிய தமிழ்ச் சொற்கள் பல வழக்கொழிந்தன. "யன்னல்" என்னும் ஒரு பாரசீகச் சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கியதால் காலதர், வளிவாய், சாளரம் என்னும் மூன்று தமிழ்ச் சொற்கள் வழக்கொழிந்தன. இவ்வாறே அமாவாசை என்னும் சொல்லைப் பயன்படுத்தியதால் காருவா, மறைமதி ஆகிய சொற்களும் பௌர்ணமி என்னும் சொல்லால் வெள்ளுவா, நிறைமதி, முழுநிலா ஆகிய சொற்களும் வழக்கிழந்தன.

இந்த நிலைகண்டு மனம் நொந்து போன பாவாணர் "முன்னோர் வைத்துப்போன சின்னஞ்சிறு பொருளைக் கூடப் பொன்போல் போற்றுவது மக்கள் வழக்கமாய் இருக்கும் போது தொன்று தொட்டு இன்று வரை கணக்கற்ற தலை முறைகளாய்த் தொடர்ந்தும் திரண்டும் வரும் அரும்பெரும் செல்வத் திரட்டாகிய மொழியை கண்ணியமாகவும் பேணுதல் வேண்டும்" என்று மக்களிடம் எடுத்துக் கூறி விழிப்புணர்ச்சி யூட்டினார்.

மேலும் "பல்லாயிரக் கணக்கில் தமிழ்ச் சொற்கள் இறந்துபட்ட இக் காலத்தும் அயன்மொழித் துணையின்றி தமிழைத் தூய்மையாக எழுதலாம்" என்று மெய்ப்பித்துக் காட்டினார். வழக்கற்ற தமிழ்ச் சொற்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தும், பயன்பாட்டிலுள்ள தமிழ்ச் சொற்களைத் தொடர்ந்து தூய்மையாகப் பயன்படுத்தியும், தேவையான போது புதிய சொற்களை உருவாக்கியும் கொண்டு தமிழ் மொழியை அயன்மொழித் துணையின்றி தூய்மையாக எழுதவும் பேசவும் கற்கவும் கற்பிக்கவும் முடியும் என்பதைத் தமது அனைத்து நூல்களிலும் தெளிவாக்கினார்.

தமிழரின் மதவியலை நடு நிலையுடன் ஆய்வு செய்து 'தமிழர் மதம்' என்னும் நூலை உருவாக்கியுள்ளார். அந் நூலில் சிவநெறி, திருமால் நெறி ஆகிய இரண்டும் தமிழரின் மதங்கள் என்று தெளிவாகக் கூறியுள்ளார். தென்னாடுடைய 'சிவன்' வேறு, வடநாட்டின் உருத்திரன் வேறு, தமிழ் நாட்டுத் திருமால் வடநாட்டு விஷ்ணு வேறு என்றும் விளக்கம் அளித்துள்ளார், தெளிவுபடுத்தியுள்ளார்.

'தமிழ் மக்கள் திருக்குறளைத் தமது வாழ்வின் வழிகாட்டி நூலாகக் கொண்டு அதன் வழியில் வாழ வேண்டும்' என்று வலியுறுத்தினார். வரலாற்றுத் துறை, கல்வெட்டுத் துறை, பழம் பொருள் கலைத் துறை போன்ற துறைகளில் தமிழர்கள் தம்மைத் தொடர்புபடுத்திக் கொண்டு தம் முன்னோர்களின் அருமை பெருமைகளை அறிய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

'தமிழர்கள் தமிழில் பெயர் சூட்டிக் கொள்வதையும் கையெழுத்திடுவதையும் வாழ்வியல் நடை முறையாகக் கொள்ளுதல் வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார். 1968 ஆம் ஆண்டில் 'உலகத் தமிழ்க் கழகம்' என்னும் தமிழ்க் கழகத்தை நிறுவினார். அதன் தலைவராகத தாம் மறையும் வரை தொண்டாற்றினார். தமிழ் மொழியின் ஒலிப்பு முறையில் தமிழின் மெல்லோசை கெட்டுவிடாத வாறு முறையாக ஒலிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இவ்வாறு தம் சிறு அசைவையும் தமிழின் மேம்பாட்டிற்குச் செலவிட்டுச் செயற்கரிய செய்த செந்தமிழ் ஞாயிறு ஞா. தேவ நேயப்பாவாணர் வழி நின்று தமிழை மேம் படுத்துவோம் அவருடைய அரிய கருத்துக் கருவூலங்களை நிலைப்படுத்துவோம். ஒல்லும் வகையில் செயற்படுத்துவோம்.
வாழ்க பாவாணர் புகழ்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவில் உலகத் தமிழர்கள்

திரு .சு. தியாகலிங்கம் அவர்கள்
உ.த.ப. இயக்கம், தலைவர் நோர்வே கிளை.

2001ம் அண்டு மார்கழித் திங்கள் 14,15,16 ம் திகதிகள் ஆம் அந்த மூன்று நாட்களும் உலகத் தமிழர் தம் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாட்களே.

1974ம் ஆண்டு ஈழத்து யாழ்ப்பாண நகரிலே ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் கடந்த இருபத்தேழு வருடங்களாக பல்வேறு வகைப்பட்ட நெருக்கடிகளையும் சுமந்த வண்ணம் உலகெங்கணும்




*தென்னாபிரிக்காவில் நடந்த உ.த.ப.இயக்கத்தின் 8வது உலக மகாநாட்டின் போது எடுத்த படம் இடமிருந்து வலமாக. திரு. நடா ராஜ்குமார், தலைவர். கீதவாணி வானொலி கனடா, திரு. சு. தியாகலிங்கம் அவர்கள் (நோர்வே கிளைத் தலைவர்,) பெருங்கவிக்கோ அவர்கள், (சென்னை) மேதகு. சிவாச்சாரியார் அவர்கள் கனடா, திரு. துரை கணேசலிங்கம் அவர்கள் (ஜேர்மனி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்துள்ளது தமது மொழி, கலை, கலாச்சார விளுமியங்களைப் பாதுகாத்துக் கொண்டும் அவ்வாறானவற்றை இழந்தும் பொருளாதார மேம்பாட்டுடனும் அவற்றை எட்டமுடியாத நிலையிலும் மாறுபட்ட சீதோஷ்ண நிலமைகளின் தாக்கத்தினாலும், தாயக உறவுகளின் உயிரலைகளின் ஈர்ப்பினாலும், இவை போன்ற இன்னோரன்ன பிற காரணிகளாலும் பாதிக்கப்ட்ட தமிழர்களை ஒரு கொடியின் கீழ் ஒன்றிணைத்து அவர்களது கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடு பொருளாதாரம் ஆகியவற்றைப் பாதுகாத்து வளர்த் தெடுப்பதற்காக வாழும் இடங்கள் தோறும் அமைத்து செயலாற்றி வருகின்றது.

இந்தக் கால கட்டத்திலே தான் மேற் கூறப்பட்ட அந்த மூன்று நாட்களும் தென்னாபிரிக்காவில் அதிகம் தமிழ் பேசத் தெரியாத, தமிழைக் கற்பதற்கும், தமிழர்களது கலை, கலாச்சாரங்களை அழியவிடாது பாதுகாப்பதற்கும் ஆவலாகவுள்ள இலட்சக் கணக்கான தமிழர்கள் வாழும் "டர்பான்" மாநகரில் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தின் எட்டாவது மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் ஐரோப்பாக் கண்டத்திலே சிறியதும், அழகியதும், முன்னாள் காலனித்துவ நாடுகளின் ஆதிக்கங்களுக்கு உட்படாததும் ஐரோப்பிய ஒன்றியத்தில் மிகுந்த செல்வாக்கு உடையதும் உலக சமாதானத்தில் அதிவிசேட அக்கறை கொண்டதும் இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியானதும் எந்தப் பிரச்சினைகளையும் சமாளிக்கக் கூடியயதுமான நிர்வாகத் திறமையும், சகோதரத்துவம் சமத்துவம் என்னும் மனிதப் பண்புகளைப் பேணும் சோஷலிசப் பாங்குடையதுமான நோர்வே நாட்டில் குடியுரிமை பெறுவதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டுப் பெருமையடைகின்றேன்.

இதன் விளைவாக உலகத் தமிழப் பண்பாட்டியக்கத்தின் நோர்வே கிளைத் தலைவராகவும் அதன் சிறப்புப் பிரதிநிதியாகவும் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டதுடன் "உலக அரங்கில் தமிழர்களை மேம்படுத்துவதற்கான முயல்வுகள்" என்னும் பொருள் பற்றி உரையாற்றவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்த மாநாட்டில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, டென்மார்க், போன்ற நாடுகளிலிருந்தும் தென்னாபிரிக்காவின் பல்வேறு மாநகரங்களில் இருந்தும் பலதரப்பட்ட தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டார்கள் அவர்களில் எனது நெஞ்சை விட்டகலாத சிலரது பெயரைக் குறிப்பிடுவதில் பெருமையடைகின்றேன்.

பன்னாட்டுத் தமிழ் உறவுச் சங்கத்தின் நிறுவுனரும் தலைவருமாகிய பெருங்கவிக்கோ டாக்டர் வ.மு சேதுராமன் (இந்தியா) சென்னைப் பல்கலைக் கழகத்துணை வேந்தர் பொன்.கோதண்டராமன் (இந்தியா) யாழன் சண்முகலிங்கம் - தமிழ் அறிஞர் (அமெரிக்கா) டாக்டர் ஜனார்த்தனன் (இந்தியா), மு. மணிவெள்ளையன், உ.த.ப இயக்கத் தலைவர்(மலேசியா), நா.சி. கமலநாதன் (ஜேர்மனி) ஆ. வேலுப்பிள்ளை உ.த.ப இயக்கம்(கனடா) தமிழ் எழுத்தாளர் ப. குணசேகர் (இந்தியா) திரு. மிக்கிச் செட்டி, திரு நாகலிங்கம் முதலி) உ.த.ப இயக்கம் தென்னாபிரிக்கா, திரு திருமதி. கோவிந்த சாமி படையாட்சி, திருமதி காமாட்சி சோதிநாதன் (தென்னாபிரிக்கா), டபிள்யு எஸ் சுவாமி (சிங்கப்பூர்), இவர்களுடன் கனடாவிலிருந்து வருகை தந்த நடா. ராஜ்குமார்- கீதாவாணி ஒலிபரப்பு நிலையம், எஸ் லோகேந்திரலிங்கம், உதயன் பத்திரிகை ஆசிரியர் இவர்களையும் குறிப்பிடலாம்.

மேலும் மாநாட்டில் மூன்று நாள் ஆரம்ப நிகழ்வின் போது உலகப் பொது மறையாம் திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது மிகவும் சிறப்பாக அமைந்தது.

மாநாடு முடிந்த பின்னரும் சில நாட்கள் தென்னாபிரிக்காவில் தங்கியிருந்து அங்குள்ள இந்துக் கோவில்களையும் பிற மத ஆலயங்களையும் தரிசிக்க முடிந்தது. அத்துடன் முக்கியமாக தென்னாபிரிக்காவில் மகாத்மாகாந்தி இருந்த வீடு, கஸ்தூரிபாய் அம்மையார் நடாத்திய பாடசாலையினது இடிபாட்டுக் கட்டிடங்கள் என்பனவற்றையும் பார்வையிட்டதுடன் விசேடமாகத் தென்னாபிரிக்கத் தமிழ் மக்களது விருந்துபாசாரங்களும் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

*"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் ஒருங்கிணைந்து உருவாக்கிய தமிழர் கொடியும் கீதமும்.

தமிழர் கீதம்


வாழ்க தமிழினம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வாழ்க தமிழ் மறை வாழ்க தமிழ் மறம்
வாழிய வாழியவே (வாழ்க)

வீரபரம்பரை ஆண்ட பரம்பரை
விண்ணையும் அளந்த ஞான பரம்பரை
விண்ணிலும் மண்ணிலும் வீறிடும் கடலிலும்
தன்மானம் காத்திடும் தமிழர் பரம்பரை (வாழ்க)

எருது வீணை புலி மீன் வில்லென
ஐங்கொடி கொண்டது முன்பேயாகும்
அத்தனை கொடியோடு ஆதவன் இணைந்தே
இக்கொடி காண்பது மகிழ்வே ஆகும் (வாழ்க)

வீரமும் தமிழும் வாழ்க வாழ்க என
வெற்றித் தமிழக் கொடியேற்றிடுவோம்
தீரமே கொண்ட திராவிட இனமாம்
தீன் தமிழர் ஒன்றாய் தலை நிமிர்வோம் (வாழ்க)

வாழ்வின் சுதந்திரம் வளம் மிகப் பெருக
வழி பல கண்டிடுவோம்
வாழ்க தமிழ் இனம் வாழ்க தமிழ் மொழி
வாழிய என நாம் எழுந்திடுவோம். (வாழ்க)




(தொடர்ச்சி மறுபக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கொடி

தமிழினத்தில் இன்று வரை பல அரசர்கள், பல ஆட்சியாளர்கள் பல கொடிகளை பறக்க விட்டுள்ளனர். இவ்வாறான பல கொடிகளில் பழமையும் பாரம்பரியமும் வாய்ந்த ஐந்து சிறந்த கொடிகள் எமது சமுதாயத்தை மேலோங்க செய்துள்ளன. அந்த ஐந்து கொடிகளும் எருதுக்கொடி, வீணைக்கொடி, வில் அம்புக் கொடி, புலிக்கொடி, மீன்கொடி என்பனவாகும்.

இற்றைக்கு 12000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என் கருதப்படுகின்ற சிந்து வெளி நாகரீகத்தின் மொஹஞ்சதாரோ, ஹரப்பா அரசுகளின் கொடியாக எருதுக் கொடி இருந்துள்ளதாக ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். எருதுக்கொடி தமிழரின் முதல் கொடியாக கருதப்படுகின்றது. எருதைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தி உயிருக்கு உணவு தந்தமைக்காக, அன்று ஆட்சி புரிந்த அரசன் தமது கொடியில் எருதைப் பறக்க விட்டு வெற்றி கண்டு மக்களை வாழவைத்தான். ஆகவே அக்காலத்தில் உணவு தரும் கொடியாக எருதுக் கொடி இருந்தது.

இற்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன் ஈழத்தில் வீணைக்கொடி பறந்தது குமரிக் கண்டத்தை மூன்றாவது முறையாக கடல் கொள்ளுமுன் ஈழநாட்டில் இருந்து ஆண்டு வந்த இராவணன் என்னும் தமிழ் மன்னன் கொடி தான் வீணைக்கொடி. இராவணன் புஷ்பகவிமானம் அமைப்பதிலும், சங்கீதத்திலும் வல்லமைபடைத்தவன் இக்கலைகளை கல்வியாக ஏற்று வீணைக் கொடியைப் பறக்க விட்டான். ஆகவே கல்வி தரும் கொடியாக வீணைக்கொடி விளங்கியது.

இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பே சேரநாட்டை ஆண்டு வந்த மன்னர்கள்,மக்களைப் பாதுகாப்பதற்கும், வேட்டையாடி உணவு பெறுவதற்கும், வில்லும் அம்பும் பயன்படுத்தினர். அதனால் வில் அம்புக் கொடியை சேர மன்னர்கள் தம் கொடியாக் கொண்டு பறக்க விட்டனர். ஆகவே வில்லும் அம்பும் அமைந்துள்ள கொடி மக்களுக்கு பாதுகாப்பைத் தரும் கொடியாக விளங்கியது.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பே சோழ மன்னர்கள் புலிக் கொடியை தம் கொடியாக உபயோகித்து வந்தனர். சோழ மன்னர்களினால் ஆளப்பட்ட நாடுகள் முழுவதும் புலிக் கொடிகள் பறந்தன. அன்று சோழ நாடு மிகவும் வளம் பொருந்தியதாகக் காணப்பட்டதோடு, சோழ மக்களும் வீரம் செறிந்தவர்களாகக் காணப்பட்டனர். மக்கள் வீரம், விவேகம்,அஞ்சாமை ஆகியன கொண்டு இருக்கவேண்டும் என்பதற்காக புலிக் கொடியை சோழ மன்னர்கள் பறக்க விட்டனர். ஆகவே புலி அமைந்துள்ள கொடி மக்களுக்கு வீரத்தைத் தரும் கொடியாக விளங்கியது.

தமிழ்ச் சங்கம் அமைத்து அதனை வளர்த்து வந்தவர்கள் பாண்டிய மன்னர்களாவர். அவர்களின் மீன் கொடிகள் அநேகமாக கிமு 2015 ஆம் ஆண்டளவில் இருந்தே கூடுதலாகப் பறந்தன. திரைகடல் ஓடியும் திரவியம் தேடியவர்கள் என்பதற்கமைய செல்வத்துக்குரிய சின்னமாக மீன் அமைந்துள்ள கொடி மக்களுக்கு செல்வத்தை தரும் கொடியாகும்.

இற்றைக்கு 32 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் குமரிக் கண்டம் முதன் முதலில் கடல் கொந்தளிப்பால் அழிவுற்றது. அக்காலத் தமிழர்களின் வணக்கச் சின்னமாக சூரியன் அமைந்தது. சூரிய வழிபாடு தமிழர்களின் தொன்று தொட்ட மரபாகும். சூரியன் சக்தியைத் தருவதனால், சூரியன் தமிழர்களின் சின்னமாக தமிழர் கொடியின் நடுவில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் உருவம் போன்று கொடியின் உருவங்கள் அமைந்துள்ளன. சிந்து வெளி எருது, தமிழர் கொடியின் கீழ் உள்ளது. இது தமிழர் பரம்பரையில் முதல் வந்த கொடி. இது மனிதனின் இடக்கால் போன்றது. ஈழநாட்டு வீணை மனிதனின் வலக்கால் போன்றது. சேரர்களின் அம்பும் வில்லும் மனிதனின் இடக்கை போன்றது. பாண்டியர்களது மீன் மனிதனின் வலக்கை போன்றது. சோழர்களின் புலி மனிதனின் தலை போன்றது. சூரியச் சின்னம் மனிதனின் இருதயம் போன்றது.

உணவு தருகின்ற சின்னமாக எருதும், கல்வி தருகின்ற சின்னமாக வீணையும், பாதுகாப்பு தருகின்ற சின்னமாக வில் அம்பும், வீரம் தருகின்ற சின்னமாக புலியும், செல்வம் தருகின்ற சின்னமாக மீனும், இயற்கை அல்லது கடவுளைக் குறிக்கின்ற சின்னமாக சூரியனும் அமைந்து ஆறு வகை வளமாக்கும் உருவங்களை கொண்டது தான் தமிழர் கொடி. பஞ்சவடிவமும், பஞ்சவர்ணமும் பஞ்ச கொடிகளின் உருவங்களும் கொண்ட தமிழன் கொடி தமிழர் வாழும் அனைத்து இடங்களிலும் பறக்க வேண்டும்.

அன்பு, அகிம்சை, சத்தியம், சகோதரத்துவம், மத ஒற்றுமை, மனிதாபிமானம் தமிழரிடையே மலர வேண்டும். சில தமிழ் இதயங்கள் அறுந்து போய் இருந்தால், அதனைத் தைப்பதற்கு, ஒற்றுமையை நிலைநாட்ட தமிழன் கொடியைப் பயன்படுத்த வேண்டும். தமிழ் நெஞ்சங்கள் வேற்றுமைகளை மறந்து தமிழினமாக ஒன்றுபடுங்கள்.

இவ்வாறாக தமிழாகள் அன்று முதல் உபயோகித்து வந்த கொடிகளை ஒன்று திரட்டி, தமிழர்கள் ஒரே பொதுக் கொடியாக தமிழர் கொடி அகில உலகத்துக்கும் கிடைக்க வழி செய்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை எல்லோரும் பாராட்டிப் போற்றவேண்டும். அதன் கனேடியத் தலைவர்வேலுப்பிள்ளையையும் பாராட்டவேண்டும்.

## தமிழர் கீதம்

தமிழர் கீதம் ஒரு நாட்டின் தேசிய கீதமல்ல, இது உலகிலுள்ள எல்லாத் தமிழ் மக்களினதும் பொதுவான கீதமாகும். இக் கீதம் உலகெலாம் பரந்து வாழும் தமிழ் மக்களின் ஆதி அந்தம் வரையுள்ள சரித்திரத்தையும் தமிழர்களின் மக்களின் தொன்மையையும் எடுத்துக் கூறுவதோடு தமிழர்களின் ஆணி வேர் முதல் பரம்பரை பரம்பரையாகக் கொண்ட பாரம்பரியத்தை பிரதிபலிக்கின்ற முத்திரையாகவும் அமைந்திருப்பதோடு, தமிழர்களின் எதிர்கால அபிலாசைகளையும் கொண்டதாக அமைந்து இருக்கின்றது.

தமிழர் கீதத்தின் முதல் நான்கு வரிகளில், தமிழ் இனத்தின் வாழ்த்தும், தமிழ் மொழியின் வாழ்த்தும், தமிழ் மறைகளின் வாழ்த்தும், தமிழ் வீரத்தின் வாழ்த்தும் கீதத்தில் முன்னே அமைந்து வருகின்றன இது தமிழர் வணக்க சம்பிருதாயங்களுக்கு அமைய முதலில் வாழ்த்துக் கூறுவதோடு, தமிழர்களின் முன்னைய சிறப்புக்களுக்கு கட்டியம் கூறுவதாயும் அமைந்திருக்கின்றது. மகிழ்ச்சியான விடயங்களுக்கு வணக்கம் கூறுவது, வரவேற்பது, வாழ்த்துவது, தமிழர் மரபுடன் கூடிய பண்பாடு என்பதை யாவரும் அறிவர்.

இனம் தோன்றிய பின்பு தானே மொழி தோன்றியிருக்க முடியும். ஆகையினால் தமிழரின் இனம் முதலில் வாழ்த்தப்பட வேண்டும் பின்பு தமிழரின் மொழி வாழ்த்தப்பட வேண்டும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடி தமிழன் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் மறைகள் பல இருந்த போதும், திருக்குறள் எல்லாவற்றிற்கும் முதன்மை பெறுகின்றது. திருக்குறள் மதசார்பற்ற மொழிசார்பற்ற இனசார்பற்ற மனித இனத்திற்கான தொன்றாகும். கீதத்தின் அடுத்த நான்கு வரிகளில் ஆலங்கன்று வளர்ந்து பருத்துப் பல விழுதுகளை உருவாக்கும். அந்த ஆலமரத்திற்கு உறுதியைத் தருவது அதன் விழுதுகள் தான். மனிதனுக்கு உறுதி தருவது அவனது பரம்பரை வாரிசுகள் தான், ஆதியிலே தமிழன் தன்னைத் தானே ஆண்டான் தலை நிமிர்ந்து நின்றான். மெஞ்ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் தன்னிறைவைக் கண்டான் கப்பலோட்டிய தமிழனாகக் கடலினிலும் தனது ஆதிக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச வணிகத்தை நிலைநிறுதினான். திரைகடல் ஓடித் திரவியம் தேடினான் இடைக்காலத்தில் ஏற்பட்ட அன்னியராட்சியின் காரணமாகப் பல்வேறு உளவலியல், சமூகவியல் தாக்கங்களுக்கு உட்பட்ட பல சிதைவுகளைக் கண்டாலும் அவற்றையெல்லாம் வெற்றி கொண்டு தமிழன் இன்று வெட்ட வெட்டத் தழைப்பவனாக, இந்த உலகில் தன்னை ஒரு இனத்தவனாக மிகவும் சிறப்பாகத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றான். சங்ககாலத்திலே கண்ட, கேட்ட வீரத்தை விடவும், புறநானூறு கூடப் புறமுதுகிட்டு ஓடும் வண்ணம் இன்று தமிழீழத்திலே தமிழனின் வீரத்தையும், விவேகத்தையும் உலகம் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

கீதத்தின் அடுத்த நான்கு வரிகளில், எமது இனம் பரம்பரைச் சிறப்பும், முதுமையும், ஆற்றலும், திறமையும், கொண்டு வாழ்ந்த இனம் என்பதை சிந்து வெளி நாகரீக சின்னமாக விளங்கும் எருதுக் கொடியும், ஈழத்தை ஆண்ட அரசனான சிவபக்தன் இராவணனின் வீணைக் கொடியும், சேரனின் அம்பொடு வில்லுக் கொடியும், சோழனின் புலிக்கொடியும், பாண்டியனின் மீன் கொடியும் பறைசாற்றி நிற்கின்றன. அவற்றோடு தமிழன் வணங்கிய எல்லோருக்கும் சொந்தச் சகோதரன் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்கு கின்ற தமிழனாக மாற வேண்டுமாயின், ஒரு குடையின் கீழ் ஒன்றுபடுவதே சிறந்ததாகும்.

ஐம்பூதங்கள் கொண்ட இந்த உலகமும் ஒன்றே! ஐந்து முகம் கொண்ட விளக்கின் ஒளியும் ஒன்றே! ஐந்து புலன்களைக் கொண்ட இந்த மனிதனும் ஒருவனே! ஐந்து கொடி கொண்ட தமிழர் பாரம்பரியமும் ஒன்றே! ஐம்புலன்களை ஒற்றுமைப்படுத்துவது வாழ்வில் உயர இதைத் தெரிந்தவன் வாழ்வில் மலரும் ஒளி விளக்கு! ஆயிரமாயிரம் கரங்கள் அன்புச் சங்கிலியால் பிணைந்து, ஆயிரமாயிரம் காலங்கள் தமிழினம் ஒன்றுபட்டு, வாழவேண்டும், மேலும் வெற்றிகள் பல காணவேண்டும் என்ற அந்த வெற்றிக்கு ஒளி தருவதற்காக உதய சூரியன் அமைந்து இருக்கின்றான்.

சூரியனைச் சுற்றித்தான் கிரகங்கள் சுற்றுகின்றன. ஞாயிற்றுத் தொகுதியின் நடு நாயகன் சூரியனே! என்ற உண்மையை கி.மு 7ம் நூற்றாண்டிற்கு முன்னரே பண்டைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். இந்த உண்மைக்குத் திருஞானசம்பந்தர் அருளிய கோளாறு திருப்பதிகமும் ஒரு சான்றாகும். அதாவது கொப்பேர்னிக்ஸ் என்ற மேற்கத்திய வானவியலாளர் இக் கருத்தைச் சொல்வதற்கு 800 ஆண்டுகள் முன்பே பண்டைத் தமிழர் இதை ஏற்றுக் கொண்டு விட்டனர் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தமிழர் கோவில்களில் நவக்கிரகங்களை நிறுவும் போது சூரியனை மத்தியில் நிறுவி அதனை மற்றைய கிரகங்கள் பார்க்கும் படியும் அதே நேரத்தில் மற்றைய கிரகங்கள் ஒன்றை ஒன்று நோக்காத வண்ணமும் நிறுவுவது சம்பிரதாயம். அன்று தொட்டு இன்று வரை தமிழர் சூரியனை வணக்கம் செய்வது வழக்கமாகும். ஆகையினால் எல்லோருக்கும் பொதுவான சூரியன் கொடியின் மத்தியில் அமைந்திருப்பது பொருத்தமாகும்.

கீதத்தின் அடுத்த நான்கு வரிகளில் அகிம்சையைப் போதித்த காந்தியடிகளை தானே அழித்தார்கள் அகிம்சைகையை அழித்தார்களா? அன்பைப் போதித்த யேசுவைத்தானே அழித்தார்கள். அன்பை அழித்தார்களா? தமிழர்களையும் பலர் அழித்துக் கொண்டிருக்கிறார்கனள் தமிழ் அழிந்ததா?, தமிழ் மறைகள் அழிந்ததனவா?, தமிழ் வீரம் அழிந்ததா? அழிக்கத்தான முடிந்ததா? ஆயுதங்களைத் தலைகுனிய வைத்த அகிம்சைப் போராட்டங்கள் இம்சிக்கப்பட்ட காலங்களிலெல்லாம் எரிமலையாய் எழுந்தான் தமிழன்! கரிமலையாக்கினான் எதிரிகளை! காத்தான் தமிழ் மொழிதனை! வெற்றிப் பரம்பரை வீரப்பரம்பரையில் வந்த தீந்தமிழர் ஒற்றுமையாய் தலைநிமிர்வோம் ஒன்றுபட்டு உயர்வோம்.

கீதத்தின் இறுதி நான்கு வரிகளில், விலங்குகள் பறைவகள் சுதந்திரமாக இந்த உலகில் வாழும் போது மனிதனுக்குச் சுதநதிரம் தேவை என்பது மறுக்கமுடியாத உண்மை அந்த சுதந்திரமும் அறிவியலோடு கூடியதாக இருக்க வேண்டும். அறிவியல் அற்ற சுதந்திரம், மனிதனை மிருகத்தை விடக் கூடாதவனாக ஆக்கிவிடும். அந்த அறிவியல், அன்பு கருணை பண்பு கொண்டதாக இருக்க வேண்டும். ஆகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத் தமிழினம் தமிழன் என்று சொல்லித் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமாயின் அதற்கு உலகத் தமிழினம் ஒரு கொடியின் கீழ் திரளவேண்டும். ஒன்று பட்டு வாழவேண்டும்.

ஆதியில் தமிழன் அகிலத்தை ஆண்டான் வானவியலிலே, திரைகடல் ஓடுவதிலே நாட்டைக் காப்பதிலே அவனுக்கு நிகராக எவரும் இருக்கவில்லை. ஆதியிலே தோன்றி தமிழர்கள் அறிவியலிலே, வாழ்வியலிலே, அறநூல்கள் படைப்பதிலே சிறந்த விளங்கினர். அத்தோடு, தேனினும் இனிய மொழியான தமிழுக்கு சொந்தக்கரர்களாகவும் விளங்கினார்கள். "தமிழர் என்றொரு இனமுண்டு தனியே அதற்கொரு குணமுண்டு" என்றவாறு, தனக்கே உரித்தான தமிழ்ப் பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்களாகவும் விளங்கினர். அத்தகைய தமிழரின் தனித் தன்மையைக் காட்டும் ஒரு கீதம் தான் தமிழர் கீதம்.

தமிழர் கீதம் உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம் இக் கீதம் ஒரு தனிப்பட்டவருக்கோ, அமைப்பிற்கோ, அல்லது ஒரு நாட்டிற்கோ உரிய சொத்தல்ல. உலகளாவிய தமிழினத்துக்கு உரிய சொத்து. உலகத் தமிழர் அனைவரும் ஒரு கொடியின் கீழ் திரண்டு ஒன்று சேர்ந்து வெற்றிகள் பல படைக்க உருவாக்கப்பட்ட கீதமாகும். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதை மனதில் இருத்தி வாழ்வதற்கு தமிழர் கீதம் வழி கோலும்.

காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு நாம் செயற்பட வேண்டும் ஆண்ட தமிழினம் மாண்டு மடிய வாழவில்லை மாறாக ஒன்றுபடுவோம் வென்று உயர்வோம் என்பதற்கமைய சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ வழிவகுப்போம் எதிர்காலம் தமிழனின் காலமாக இருக்க வேண்டும். ஆகையினால் உங்கள் விழாக்கள் ஒன்று கூடல்களில் இக் கொடியை ஏற்றியும் கீதத்தை இசைத்தும் தமிழர் ஒற்றுமைக்கும் வெற்றிக்கும் வழி அமைக்க உதவவேண்டும்.

(உ.த.ப.இயக்கம் தலைமையகம்)

# தமிழை வளர்ப்போம்

**அகிலத் தலைவர், தமிழ்த் திரு.சி. செல்லய்யா அவர்கள்,**
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் கனடா

*தமிழ் மகாநாடுகள் மாத்திரம் நடத்துவதால் நமது இயக்கம் வளரப் போவதில்லை மகாநாடுகளில் எடுக்கும் தீர்மானங்களைச் செவ்வனே நடைமுறைப்படுத்தினால் மட்டும் இயக்கத்தின் செல்வாக்கு வளரும்.*

*இன்றைய காலகட்டத்தில் மொழி, பண்பாடு, ஆகியவற்றில் மக்களுக்கு அவ்வளவாக அக்கறை இல்லை. குறிப்பாக ஈழத்தமிழரின் நிலைப்பாடு அப்படித்தானிருக்கிறது. தமிழ் நாட்டுத் தமிழருக்கோ எதுவித ஊக்கமோ கவலையோ கிடையாது. அவர்களுக்கு வேணடியதெல்லாம பணம் கவிக்கோ போன்ற சிலர் மட்டும் தான் தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் பிரயாசப்படுகிறார்கள். இலங்கைத் தமிழர் ஒரு சாரர் மட்டும் தமிழை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். மலேசியத் தமிழர்கள் தமிழை வளர்ப்பதில் மிகவும் ஆர்வமுடன். செயற்படுகிறார்கள். இந்நிலையில் எமது இயக்கத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வது கஷ்டம் தான். அதற்காக நாங்கள் எங்கள் கடமைகளைச் செய்யாமல் விடக்கூடாது. எங்களால் இயன்றவரை பாடுபடுவோம். நமது 9வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடாத்த எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். நாம் தமிழை வளர்ப்போம். தாயகம் வளம் சேர்க்கப் பணி செய்வோம்.*

வாழ்க தமிழ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8ஆவது உலக மகாநாடு

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தீர்மானங்கள்

1 உலகளாவிய தமிழக் கல்வியின் வளர்ச்சிக்குச் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொன். கோதண்டராமன் அவர்கள் உதவுவதைப் பாராட்டுவதோடு எமது விரைந்த செயலுக்கு ஊக்கம் தர இம்மாநாடு அப்பெருமகனை வேண்டுகின்றது.

2 இம்மாநாட்டில் ஏற்றப்பட்ட தமிழனின் கொடியை அனைத்துலகத் தமிழ் மக்களும் தமது போற்றுதற்குரிய செயலாக இன்று முதல் ஏற்றிப் போற்றவும் இம்மாநாடு கனிவுடன் வேண்டுகின்றது.

3 ஆலயங்கள் தமிழ்மொழி வழிபாட்டு அர்ச்சனை முறையை தொடர்ந்து பின்பற்றுமாறு உலகத் தமிழ் மக்களை இம்மாநாடு வேண்டுகின்றது.

4 தேவ நேயப் பாவாணர் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட செந்தமிழ் சொற்பியல் ரேகர முதலியை நிறைவு செய்யச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு ஆணையிடுமாறு தமிழ்நாடு அரசை இம்மாநாடு வேண்டுகின்றது. தேர்தல் பிரசாரத்தின் பொழுது இலங்கை எதிர்க்கட்சி தாங்கள் பதவிக்கு வரும் பட்சத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் இனப்போரை நிறுத்தி சுமூகமான முடிவு கண்டு நாட்டின் சீர்குலைந்த பொருளாதாரத்தையும் மக்களின் பாதிப்புக்களையும் சீர்படுத்தப் பின்வரும் தீர்மானங்கள் இம் மாநாடு நிறைவேற்றுகின்றது.

5 இலங்கைத் தமிழர்கள் கடந்த பல ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருக்கும் தாங்க முடியாத இன்னல்களையும் அழிவுகளையும் முடிவிற்குக் கொண்டுவருவதற்கான திட்டங்களை உடனடியாக வகுத்துப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையை சுமூகமாக தீர்க்க முன்வரவேண்டும். என்று இலங்கை அரசை இம்மாநாடு வேண்டுகின்றது.

6 பேச்சுவார்த்தைகள் சீரான முறையில் நடைபெற இலங்கை அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அடிப்படையில் யுத்த நிறுத்தத்தை அமுல் செய்ய வேண்டுமென்று இம்மாநாடு கோருகின்றது.

7 தற்பொழுதுள்ள சாதகமான சூழ் நிலை உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் பயன் பெறும் வகைக்கான வங்கி ஒன்றினை உருவாக்கும் பணிகளை உடனடியாக தொடங்கப்படும் வகையில் உ.த.ப இயக்க தலைமையகமும் உ.த.ப இயக்க உலகளாவிய கிளைகளும் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 தமிழகத்தின் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் தமிழே பயிலாது ஒருவர் பட்டம் பெறும் நிலையை இம்மாநாடு கண்டிப்பதோடு அனைத்துப் பட்டப்படிப்பிலும் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலக கல்விப் பிரிவு தென்னாபிரிக்கா தமிழர் கூட்டு இணைப்புக் கழகத்தின் கல்வி பிரிவுடன் இணைந்து தென்னாபிரிக்கா தமிழர்களுக்கான கல்வித் திட்டத்தை ஏற்படுத்தும் என்பதனை இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

## ஈழத்தமிழர்கள் சார்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் எட்டாவது உலக மாநாடு இலங்கைத் தமிழர்களின் அவல நிலையைக் கவனத்தில் கொண்டு மார்கழி மாதம் 5-ம் நாள் 2001 எதிர்கட்சியினரின் கூட்டமைப்பு நடைபெற்ற மக்களவை தேர்தலில் வெற்றி பெற்றதை நினைவில் கொண்டு பாவித்து இலங்கைத் தமிழர்கள் சமாதானமாகத் தங்கள் வாழ்க்கையை உருவாக்க இந்திய அரசு தனது நற்பணிகளை மேற்கொண்டு இலங்கை அரசையும் மக்களையும் இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான திட்டத்தை வகுக்க முன் வரவேண்டும் என்று இம்மாநாடு கோருகின்றது.

தற்பொழுது சாதகமான சூழலைக் கவனத்தில் கொண்டு அமெரிக்கா அரசு இனப்பிரச்சனையை முடிவிற்கு கொண்டு வர ஆக்கபூர்வமான செயல்பாடுகளை மேற்கொள்வதுடன் (மார்கழி மாதம் 5-ம் நாள் 2001) நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் பொழுது எதிர்கட்சியினரின் கூட்டமைப்பு மக்கள் முன்வைத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சூழலை உருவாக்க யுத்த நிறுத்தத்தை அமுல் செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள இலங்கை அரசை அமெரிக்கா அரசு வற்புறுத்த வேண்டும்.

அ. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களினால் தொடங்கி வைக்கப்பட்ட செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி அதன் வழியில் செம்மையாகவும் முழுமையாகவும் வெளியிடப்படுதல்.

ஆ. சமகாலத்தில் அறியப்பட்டுள்ள புதிய அறிவியல்களுக்கான கலைச் சொற்களை கண்டறிதலும் உருவாக்குதலும்.

இ. குடிபெயர்ந்து உலகெங்கும் பல்வேறு மொழிச் சூழலில் வாழுகின்ற தமிழ் மக்களிடையே தாய்மொழிக் கல்வியை வளப்படுத்தித் தாய்மொழியை அழியாது பாதுகாத்தல். இனப்பற்றையும் வரலாற்று உணர்வையும் அழியாது பாதுகாத்தல். மேற்கண்டவற்றை நிலை நிறுத்துவதற்கான உலகளாவிய பாடத்திட்டம் ஒன்றை உருவாக்குதல்.

ஈ. தமிழ் ஈழத் தேசியத் தலைவர் மேதகு.வே. பிரபாகரன் அவர்களின் ஆணைப்படி தமிழ் ஈழத்தில் அனைத்துப் பெயர்களும், தூய தமிழுக்கு மாற்றப்பட்டுள்ளது போல் உலகெங்கும் வாழும் தமிழர்கள் தனித் தமிழ்ப் பெயர் சூட்டவும் தனித்தமிழைப் பயன்படுத்துவதற்கும் பாடுபடுதல்.

உ. சங்க்காலத் தமிழ் நூல்கள் உட்பட தமிழிலும், பிறமொழிகளிலும் வெளியிடப்பட்ட தமிழ் நூல்களைத் திரட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தலைமையகம் 2001-2004 வரை

17-12-2001 திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் தென்னாபிரிக்காவில் டர்பன் நகரில் அமைந்துள்ள அருட்பாக்கழகத்தில் நடைபெற்ற தலைமையக மத்திய குழு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபையினர்களின் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| தலைவர் | : திரு. சி.செல்லையா | (கனடா) |
| பொதுச்செயலாளர் | : திரு. துரை.கணேசலிங்கம் | (ஜெர்மனி) |
| பொருளார் | : திரு. ஆ.வேலுப்பிள்ளை | (கனடா) |
| துணைத்தலைவர்கள் | : பெருங்கவிக்கோவா.மு.சேதுராமன் | (இந்தியா) |
| | : திரு.ப.கு. சண்மும் | ( மலேசியா) |
| கல்விப்பொறுப்பாளர் | : திரு. நா.சி. கமலநாதன் | (ஜெர்மனி) |
| உதவிப்பொருளாளர் | : திரு. மு.மணிவெள்ளையன் | (மலேசியா) |
| செயலாளர் | : திரு. ஆ. சண்முகலிங்கம் | (இலங்கை) |
| யுனெஸ்கோ பொறுப்பாளர் | : திரு. அலன் ஆனந்தன் | (பிரான்ஸ்) |
| உதவித்தலைவர்கள் | : திரு.கு.ஜெயக்குமார் | (டென்மார்க்) |
| | : திரு.பொ.ச.வெங்கடேசன் | (மலேசியா) |
| | : திரு.வே. கோவிந்தசாமி | (தென்னாபிரிக்கா) |
| | : திருமதி. காமாட்சி சோதிநாதன் | (தென்ஆபிரிக்கா) |
| | : திரு.ம.இரசநாதன் | (நியூசிலாந்து) |
| | : திரு.ரெ.மாரிமுத்து | (பர்மா) |
| | : திருமதி. வி. பொன்னி | (மலேசியா) |
| | : திரு.வீர.மதுரகவி | (புதுவை) |
| | : திரு.என்.லோகேந்திரலிங்கம் | (கனடா) |
| | : திரு.நா.பெருமாள் | (மலேசியா) |
| | : திரு.கிரால். கிருஷ்ணன் | (தென் ஆபிரிக்கா) |
| | : திரு.செ.சிவராசலிங்கம் | (சுவிசர்லாந்து) |
| | : திரு.பா. விசுவலிங்கம் | (ஜெர்மனி) |
| | : பேராசிரியர்.இ. ராமமூர்த்தி | (கர்நாடகம், இந்தியா) |
| | : திரு.மு.அந்தலானார் | (சேலம், இந்தியா) |
| | : சட்டத்தரணி செ.யோகராசா | (லண்டன்) |
| | : திரு.சு.தியாகலிங்கம் | (நோர்வே) |
| | : திரு.இ. தவகோபால் | (இலங்கை) |
| சர்வதேசத் தொடர்பாளர் | : திரு.நடா. ராஜ்குமார் | (கனடா) |
| காப்பாளர்கள் | : மாண்புமிகு.செஞ்சி. ராமசந்திரன் | (இந்தியா) |
| | : மாண்குமிகு.டத்தொ.சு.சாமிவேலு | (மலேசியா) |
| | : டாக்டர்.இ.பாலசுந்தரம் | (கனடா) |
| | : டாக்டர்.இரா. சனார்த்தனம் | (இந்தியா) |
| நடவடிக்கைக் குழுவினர் | : திரு.ஆ. வேலுப்பிள்ளை | |
| | : திரு.நா.சி கமலநாதன் | |
| | : திரு.கு.ஜெயக்குமார் | |
| | : திரு.பொ.சா வெங்கடேசன் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய மேனிலைத் தமிழ்க் கல்விப் பணிகள்

## புலவர் திரு.நா.சி. கமலநாதன், ஜேர்மனி

கடந்த ஆண்டு எமதியக்க எட்டாவது மாநாடு தென்னாபிரிக்காவில் இனிது நடந்தேறியமை அறிந்ததே. மாநாட்டையொட்டி அமர்ந்த பேரவை அமர்வில் ஒழுங்கமைக்கப்பட்ட, புதிய பேரவையில் நான் மீண்டும் கல்விப் பொறுப்பாளராகப் பணியாற்றப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளேன். எனவே, அப்பணியை சிறப்புற ஆற்றுவதற்கும் பயன் பெற நிறுத்துவதற்கும் தங்களது ஒத்துழைப்பை நல்குமாறு வேண்டுகின்றேன். அவ்வகையில் நாம் பல்துறைப்பட்ட கல்விசார் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியவர்களாய் உள்ளோம்.

1. உலகளாவிய அளவில் தமிழ்ச் சிறார்களுக்கு, இலகு வழியில் தமிழை கற்பித்தலுக்கான முறைகளை ஆய்தலும், நடைமுறைப்படுத்தலுக்கான திட்டங்களை வகுத்தலும், புதிய பாடநூல்களை ஆக்கலும்.
2. தமிழ் ஒழிந்த நாடுகளான ஆபிரிக்கா, தென்னமெரிக்க, தூரகிழக்கு நாடுகளுக்கான வாழ்நில மொழிகள் ஊடான கற்பித்தல் முறைகளை ஆக்கலும் நடைமுறைப்படுத்தலும்.
3. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழில் உயர்கல்வி பெறுவதற்கான அஞ்சல்வழிப் பாடநெறிகளை, தமிழகப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஒழுங்கமைத்தலும் பயிற்றுதலும், தேர்வு நடாத்தலும்.
4. ஏற்கனவே நடைமுறையில் உள்ள "குறள்மணி" இலக்கியப் பட்டப் படிப்பினை வளர்த்தலும் எனப்பல காரியங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

இவற்றுள் 1ல் குறிப்பிடப்பட்டுள்ள செயல், ஏற்கனவே ITec நிறுவனத்தால் உலகளாவ, தமிழறிவுள்ள, தமிழ் கற்குமளவிற்கு மொழியறிவுடைய தமிழர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், அச் செயற்பாட்டில் அந்நிறுவனத்துடன் இணைந்து அல்லது அதன் ஆதரவுடன் செயற்படுவது. பற்றி ஆய்ந்து முடிவெடுத்தல் வேண்டும். மற்றைய செயல்களில் பின்வரும் அடிப்படையில் பாடநூலாக்கங்களை மேற்கொள்ள எண்ணுகின்றோம்.

அ. இதுவரை காலமும் காலந்தோறும் தமிழினத்தின் மீது ஏற்பட்ட அந்நிய மொழி, பண்பாட்டு ஆதிக்கங்களினால், ஒழுங்கமைக்கப்பட்டு. நாம் பின்பற்றி வந்த, இனச்சிதைப்பிற்கு ஏற்றவகை மொழியியல் பண்பாட்டியற் கல்விமுறையை மீளாய்வு செய்து, அறிஞர்கள் மதியுரையுடன், தமிழியலுக்கு ஏற்ப உருவமைப்பது.

ஆ. அந்நியமொழிக் கலப்பினால் கதம்பம் ஆகியுள்ள தமிழைத் தூய்மைப்படுத்தி நற்றமிழ் நூல்களை ஆக்குதல்.

இ. தேவநேயப் பாவாணர் ஆய்ந்து வெளிக்கொணர்ந்த தமிழியல் பண்பாட்டியல் விழுமியங்களைப் பரப்பும் வகையிலான உயர் கல்வியை ஒழுங்குபடுத்துதல்.

ஈ. சமய வேறுபாடுகளைக் கடந்த, தாய் மொழி வழியான சமய வழிபாடுகளுக்கான ஏதுக்களை பரப்புதல் என்றிவ்வாறான வழிகளில், தமிழறிஞர்களின் படைப்புக்கள் மதியுரைகள் ஆகியவற்றை ஆய்ந்து ஏற்ற வழி செயற்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. உலகில் தமிழர்கென்று தனிநாடு இல்லாத காரணத்தால் பல நாடுகளிலும் இறைமையுடனோ அடிமைப்படுத்தப்பட்டோ, எவ்வழியானாலும் வாழ்கின்ற தமிழர்கள், அவ்வந்தநாட்டு அரசுகளினால் தமது அரசியல் நலன்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட பாடநூல்களையே, தமிழ் பாட நூல்களாக பயிலும் கட்டாயம் இருப்பதால், கடந்த 50 ஆண்டு காலமாக எந்த நாட்டுத் தமிழனும், தன்னை தன்மொழியை தன் பண்பாட்டை, இனத்தின் வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கற்காமல், தன் தனித்துவத்தை மறக்கச் செய்யும் கல்வியை கற்றுக்கொண்டிருக்கின்றான். இந்நிலையை கூர்ந்து நோக்கி மற்றைய நாட்டினங்களைப் போல் தமிழர்க் கேற்ப தமிழ்க் கல்வி முறையை உருவாக்குதல்.

இன்னும் பல பெரும் பணிகள் எம் முன்னால் கிடப்பினும், இவை முகாமைப்படுத்தப்பட்டு முயலப்பட உள்ளது. இவ்வரிய பணியினை மேற்கொள்ள தாங்கள் தங்கள் நிலங்களில் வாழும் துறைசார் கல்வி மான்களையும் நற் தமிழ் அறிஞர்களையும் கல்வித துறை ஈடுபாடுடையோரையும் இனங்கண்டு அவர்களது ஒத்துழைப்பைப் பெற்று தருவதுடன் தங்களது எண்ணங்களையும் தந்துவவுமாறு வேண்டுகின்றேன்.

நன்றி

# வாழ்வும் வளமும்

*கவிஞர் க. நாகராசா*
நுணாவில்.

இயல்பு வாழ்வை
இலகு வாக்கும்
புரிந்துணர்வின்
பின் வீழ்ந்த
பயன் தரும்
பனை மரங்கள்
இறுதி மூச்சை
இழக்க முன்
பெரு மூச்சுடன்
புதிய வுணர்வின்
முழுப் பலத்தை
வருங்காலத்தில்- இதனால்
உருவாக்கும் நற்பயனை
உணரு முரிமை
தறிக்கப்பட்டதால்
பறிக்கப்பட்டமை
மாத்திர மன்றி
பார்த்துப் பாராமல்
வெட்ட வெட்ட
வெட்டை வெளி
பெருகி யருகே
நெருங்கி வருவதால்
பருவ மழை
அருகிப் போகும்
பசுமை குன்றி
வறுமையே மிஞ்சும்
தொன்று தொட்டு
நிமிர்ந்து நிற்கும்
பனை தென்னையை
மலையென்று - நம்பும்
மக்கள் வாழ்வின்
அகம் புறத்தில்
புயல் வீசும்
கடும் வெப்பத்தால்
சூழலும் சுடும்
மறு புறத்தில்
பாதைத் திறப்பால்
இங்கு குவியும்
பொருட்களை விரும்பி
வாங்கும் சக்தி
பொது மக்களிடம்
குறைந்து போகும்
இதனால் பாதிப்பு
அனைவருக்கும் தான்
இந்த நிலையே....
மீண்டும் மீண்டும்
தொடரா திருக்க..
தொலை நோக்கும்
ஒற்றுமை யுணர்வும்
ஒன்று சேர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கிறோம்



## திருமதி துரைச்சாமி ஆச்சிமுத்து அவர்களின் மறைவுச் செய்தி

உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு.துரை. கணேசலிங்கம் (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தாயார் திருமதி துரைச்சாமி ஆச்சிமுத்து அவர்கள் 17-08-2002 இல் அன்று தமிழீழம் யாழ்ப்பாணத்தில் காலமான செய்தி கிடைந்துள்ளது. அன்னாரின் மறைவுக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை அதன் ஆழ்ந்த துயரங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அமரரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

## லண்டனில் நடைபெற்ற உ.த.ப.இயக்கத்தின் பேரவை மகாநாடு.

*12.10.2002 இல் அன்று உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் உலகப் பேரவைக் கூட்டம் லண்டன் மகாநகரில் நடைபெற்றது. இதற்கு உ. த. ப இயக்கத்தின் அகிலத் தலைவர் தமிழ்த் திரு. சி. செல்லய்யா அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார். துணைத் தலைவர் தமிழ்ப் பணிச் செம்மல் பெருக்கவிக்கோ திரு வா. மு. சேதுராமன் அவர்கள், பொதுச் செயலாளர் தமிழ்த் திரு. துரை கணேசலிங்கம் அவர்கள் மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் உள்ள கிளை பிரமுகர்கள் பலரும் மகாநாட்டில் கலந்து சிறப்பித்தார்கள்.*

*இலங்கைக் கிளை அமைக்கவிருக்கும் "உலகத் தமிழர் நடுவணகம்" அமையும் காணி, நிலம் வாங்குவதற்கு நிதி உதவி செய்வதென்ற விடயம் தீர்மானிக்கப்பட்டது. உ. த. ப இயக்கத்தின் உலகளாவிய மேனிலைத் தமிழ்க் கல்விமையம் தென்னாபிரிக்காவில் நடாத்தவுள்ள தமிழ்க்கல்வித் திட்டக் குழுவின் மகாநாட்டை 2003 இல் பங்குனியில் நடாத்துவதென்ற தீர்மானமும் இந்தப் பேரவை மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துயர் பகிர்கிறோம்

## திரு. சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் மறைவு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நோர்வே கிளைத் தலைவர் திரு. சு. தியாகலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார் திரு. சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 06-10-2002 இல் அன்று யாழ்ப்பாணத்தில் மறைந்த தகவல் கிடைத்துள்ளது. அன்னார் யாழ்ப்பாணம், தீவகம் நெடுந்தீவு முன்னாள் பிறப்பு இறப்புப் பதிவாளராக இருந்தவரென்பது குறிப்பிடத்தக்கது அவரின் மறைவுக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## திருமதி தேவராணி தவகோபால் அவர்களின் திடீர் மறைவு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை செயலாளர் திரு. தவகோபால் அவர்களின் பாசமிகு துணைவியார் திருமதி தேவராணி தவகோபால் அவர்கள் 22.08.2002 இல் அன்று யாழ் உரும்பிராயில் நோய் வாய்ப்பட்டு திடீரென மறைந்த துயரச்செய்தி கிடைத்தது அன்னாரின் மறைவுக்கு உ.த.ப இயக்கம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது.



## அமரர் திரு. பொன்னுத்துரை நடராசா கனடா அவர்கள் (கனடா)

கனடாவில் தமிழர் சமுதாயத்தில் பெயர் பெற்று வளங்கி வந்த தாவடியைச் சேர்ந்த திரு. பொன்னுத்துரை நடராசா அவர்கள் பிரபல சமூக சேவையாளராக விளங்கி வந்தவர் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் முகாமையளராக இருந்து தாயகத்தில் மக்களின் அபிமானம் பெற்றவர் உ.த.ப இயக்கத்தோடு ஈடுபாடு கொண்டிருந்து வந்த இவர் 07-11-2002 இல் அன்று கனடா மொன்றியலில் காலமான துயரச் செய்தி கிடைத்தது. அவருடைய ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுவதுடன் அன்னாரின் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*உ.த.ப.இயக்கம் இலங்கைக் கிளை.*

**IMTC - HEAD QUARTER**
**936 MCCOWAN ROAD,**
**SCARBOROUGH**
**ONT, M 1P3H6**
**CANADA.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75 ஆவது அகவையில் நமது தலைவர் தமிழ்ப்பணிச் செம்மல் திரு. சி. செல்லையா அவர்கள்



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைவராக விளங்கிவரும் தமிழ்ப்பணிச் செம்மல் திரு.சி.செல்லையா அவர்கள் தனது 75ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறார் அவர் சீருடனும், சிறப்புடனும் மேன்மையுடனும் தேக நலத்துடனும் இன்னும் பல்லாண்டு வாழ்கவென நாம் உள்ளன்புடன் வாழ்த்துகிறோம்.

உலகத் தமிழர்களின் உள்ளங்களில் நிறைந்திருப்பவர் நமது தலைவர் அவர்களின் வாழ்வியல் நிலை அறிந்தவர் வரலாறு தெரிந்தவர் அவர்கள் தமிழர்களாக தமிழ் அறிந்தவர்களாக இருக்க வேண்டுமென்றும் அவர்களிடையே உலகளாவிய ரீதியில் நட்பும் பிணைப்பும் ஒருங்கிணைப்பும் இருக்க வேண்டுமென்றும் விரும்புவர் இதற்கான பணிகளைச் செய்துவரும் இந்தப் பெரியார் நேர்மையுடனும் நிதானத்துடனும் பக்கஞ் சராமல் செயற்படும் பெருமைக்குரிய பாங்கனர்

இவரின் பிறந்த நாள் பெருவிழா 21-12-2002 இல் அன்று கனடா நாட்டில் உள்ள காஷோன் விருந்தினர் விடுதியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் தமிழ் அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு வாழ்த்துரையும் ஆசியுரையும் வழங்கினார்கள்.

–திரு. ஆ.ச.லிங்கம்–

## அருமைத் தம்பியே!

**அருமைத் தம்பியே! அழகுத் தங்கையே!**
**பெருமைக் கல்வியைப் பிழையறக் கற்றுவா!**
**இமிழ் கடல் உலகில் இருக்கும் மொழிகளுள்**
**தமிழ் மொழி உனக்குத் தாய்மொழி அன்றோ!**

**இன்பத் தமிழே எல்லா மொழிக்கும்**
**முன்பு பிறந்த முதுமொழியாகும்**
**செம்மையும் நன்மையும் செறிந்த மொழியிது**
**நம்மையும் பிறரையும் நயந்த மொழியிது**

**ஒளிதரும் வாழ்க்கைக்கு உகந்தமொழி - என**
**வெளி நாட்டறிஞரும் வியந்த மொழியிது**
**தமிழரின் பெருமை தமிழனால் வந்தது**
**தமிழரின் சிறுமை தமிழ் கெட வந்தது.**

-பாவலரேறு பெருஞ் சித்திரனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலமும் தமிழ்தான் பிரஞ்சும் தமிழ்தான்

லோகநாயகி

ஆங்கிலமும், பிரெஞ்சு ஜேர்மன் என்று உலகில் எந்த மொழியை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்.........எல்லாமே தமிழ் தான்...........! என்று திடுக்கிட வைக்கும் ஒரு தகவலைக் கூறுகின்றார் மொழியியல் நிபுணரான சாத்தூர் சேகரன்!

சாத்தூர் சேகரனுக்கு உலகத்தின் பெரிய மொழிகள் (கிட்டத்தட்ட ஐந்து லட்சம் பேருக்கு மேல் பேசுகின்ற மொழி) என்று சொல்லப்படும் சுமார் நூற்று இருபது மொழிகளும் அதன் இலக்கணத்தோடு தெரியுமாம்.... தவிர சிறிய மொழிகள் என்ற அளவில் நானூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளையும் (ஆய்வுக்காக) தெரிந்து வைத்திருப்பதாகச் சொல்கிறார்.

தற்சமயம் சென்னை (பாரீஸ் கார்னர்) ஒய்.எம் சி.ஏ. வில் மாதம் ஒரு மொழி என்ற தலைப்பில் தமிழை உலகத்தின் மொழிகள் ஒவ்வொன்றோடும் ஒப்பிட்டு பேசி வருகின்றார். சாத்தூர் சேகரன்.

அப்படி பேசும் போது தமிழோடு ஒப்பிடக்கூடிய அந்த இன்னொருமொழி தெரிந்தவர். ஒருவரும் இவருடன் மேடையில் இருக்கிறார். இதுவரை இப்படி முப்பது நிகழ்ச்சிகள் நடந்து முடிந்திருக்கின்றன.

நாடு விட்டு நாடு போகாத அடிப்படை வார்த்தைகள் என்று ஒவ்வொரு மொழியிலும் உண்டு அம்மா, அப்பா, கண், காது, மூக்கு, முகம் என்று மனிதன் தோன்றியதிலிருந்தே இருக்கும் இப்படிப் பட்ட அடிப்படை வார்த்தைகள் மொத்தம் இருநூற்று நான்கு. இதில் குறைந்த பட்சம் இருபது வார்த்தைகளுக்காவது இரண்டு மொழிகளுக்குள் ஒற்றுமை ஏதாவது ஒரு காலத்தில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்கின்றார்கள் மொழி அறிஞர்கள்!

இருபது வார்த்தைகள் என்ன........ உலக மொழிகள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கும் மேற்பட்ட வார்த்தைகளில் ஒற்றுமையைக் காட்ட என்னால் முடியும் என்ற தீர்மானமாகக் கூறுகிறார். சாத்தூர் சேகரன்.

இப்படி இவர் கூறுவதற்கு பூகோளரீதியான ஒரு காரணத்தையும் முன் வைக்கின்றார்.

"மனிதர்கள் எல்லோரும் குமரிக்கண்டத்தில் இருந்துதான் உலகம் முழுக்கப் போய் குடியேறி இருக்கின்றார்கள். அன்று பேசப்பட்டு வந்த பழம்தமிழ் தான் இன்றும் சிற்சில மாற்றங்களுடன் (அதுவும் இலக்கணவிதிப்படி மாற்றப்பட்டு) உலக மக்களால் பேசப்பட்டு வருகின்றது..... என்கின்றார் உறுதியுடன்.

இந்த அளவுக்கு இவர் தீர்மானமாக இந்த விடயத்தைச் சொல்வதற்றுக் காரணம் கடந்த 30 ஆண்டு காலமாக இந்தத் துறையில் இவர் செய்துவரும் ஆராட்ச்சி தான் இதற்கு உலகம் முழுக்க (ஒரு சில நாடுகள் தவிர) சுற்றி வந்திருக்கிறார்.

சமக்கிருதம் ஆட்சி செலுத்தும் பனாராசு பல்கலைக்கழகங்களிலும் ஆராய்ச்சி நிலையங்களிலும் தன் கருத்தைத் துணிந்து பேசியும் இருக்கின்றார். இத்தனைக்கும் அடிப்படையில் இவர் ஒரு துணி வியாபாரி லயோலா கல்லூரியில் இடைர்மீடியட்டும் தபால் மூலம் எம்.ஏ. யும் (சரித்திரம்) படித்தவர். இவரது அப்பாவுக்கு எட்டு மொழிகள் சரளமாகப் பேசமுடியும். அப்பாவுக்கு போட்டியாக பதினாறு மொழிகளாவது தெரிந்து கொள்ள் வேண்டும் என்ற ரீதியில்தான் இவர் மொழிகளைக் கற்றுக்கொள்ளவே ஆரம்பித்திருக்கிறார்.

தன் டீன் ஏஜில் டாக்டர் கால்ட்டுவெல் எழுதிய ஒரு புத்தகத்தைப் படிக்க ஆரம்பிக்க.....ஜுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி பற்றிக் கொண்டது. இந்த மொழியியல் ஆராய்ச்சிகார்ல்ட்டுவெல் தனது புத்தகத்தில் சமஸ்கிருதம் சீனம் சிந்தியமொழி (ருசிய,மங்கோலியா, சைபீரியா, ஜப்பான்,கொரியா போன்ற இடங்களில் பேசப்பட்டு வரும் மொழிகள் தான் சிந்திய மொழிக்குடும்பம்) போன்றவற்றோடு தமிழுக்கு இருக்கும் ஒற்றுமைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அதற்குப் பின் தமிழுக்கும் பல்வேறு உலக மொழிகளுக்கும் இருக்கும் உறவு பற்றிப் பல நாட்டு அறிஞர்கள் எழுதிய புத்தகங்களைப் படித்திருக்கிறார்.

இதே துறையில் ரொம்பவும் அரிதான புத்தகங்கள் என்ற வகையில் உலகம் முழுக்கத் தேடிக் கிட்டத்தட்ட இருபதாயிரம் புத்தகங்கள் வரை தன் நூலகத்தில் சேமித்தும் வைத்திருக்கின்றார்.

எல்லாவற்றையும் படித்த போது இலக்கண ரீதியான சில அடிப்படை விதிகள் பிடிபட்டுப் போயிற்று......! அந்தப் பதினைந்து விதிகள் ஆச்சரியமாக எல்லா மொழிகளுக்கும் பொருந்தி வந்தன. இந்த அடிப்படை விதிகளை ஒருவர் தெரிந்து கொண்டால் போதும் தமிழ் மூலம் உலகின் எந்த மொழியையும் கற்றுக் கொள்ள முடியும். ஆர்வம் இருப்பவர்களுக்கு ஒரு வாரம் கூடப் போதும் என்கின்றார் இவர்.

ஒரு துணி வியாபாரி தமிழ் பற்றி ஆராய்ச்சி செய்வதா...? என்ற ரீதியில் என் முயற்சியைச் சில தமிழர்கள் கேலி செய்ததும் கூட உண்டு அப்புறம் நான் கொடுத்த விளக்கத்தில் இப்போது என் கருத்தை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.... என்ற கூறும் இவர்...

தமிழுக்கும் மற்ற மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைபற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக இதுவரை எழுதியுள்ள புத்தகங்கள் நாற்பத்க்குமேல்! தவிர பிரசுரிப்பதற்கு தயாராகக் கையெழுத்து பிரதியாகவே நூற்றுக் கணக்கான புத்தகங்கள் இவரிடம் இருக்கின்றன.

இவரது சமீபத்திய வேலை எல்லா உலக மொழிகளுக்கும் தமிழ் அர்த்தத்தொடு அகராதி எழுதுவதுதான்! இப்படி இதுவரை கிட்டத்தட்ட நூறு அகராதி தயாராகிவிட்டது. தவிர வார்த்தைகள் எப்படிப் பிறக்கின்றன. என்று சொல்லும் வேர்ச் சொல் அகராதி நாற்பதை (பல்வேறு மொழிகளுக்கானது) பிரசுரிக்கத் தயார் நிலையில் வைத்திருக்கிறார்.

தமிழில் பெரிய அளவில் வேர்ச் சொல் அகராதி வெளியிட ஆரம்பித்தவர் தேவநேயப் பாவாணர் தான் சுமார் 6000 வார்த்தைகள் கொண்ட அதன் முதல் பாகத்தை ஒன்பது வருடங்கள் பாடுபட்டு முடித்தார் அவர் அதற்குப் பின் டாக்டர் மதிவாணன் என்பவர் அதன் இரண்டாம் பாகத்தை வெளியிட்டார். தேவநேயப் பாவாணரைப் போலவே ஆறாயிரம் வார்த்தைகள் கொண்ட அகராதி முடிக்க அவருக்கும் ஒன்பது வருட காலம் ஆனது.

ஒரு துணிவியாபாரி தமிழ் பற்றி ஆராய்ச்சி செய்வதா...? என்ற ரீதியில் என் முயற்சியைச் சில தமிழறிஞர்கள் கேலி செய்ததும் கூட உண்டு. தமிழக அரசனின் இந்தவேர்ச் சொல் அகராதி திட்டத்தில் இன்னும் பத்துப் பாகங்கள் மீதியுள்ளன.

இதைப் பற்றிக் குறிப்பிடும் போது சாத்தூர் சேகரன் என்னிடம் அரசு இந்தப் பணியை ஒப்படைக்கட்டும் மீதியிருக்கும் 10 பாகங்களையுமே ஐந்தே வருடங்களில் நான் முடித்துத் தருகிறேன். காரணம் இத்தனை வருட ஆராட்ச்சியில் விடயங்கள் என் விரல் நுனியில் இருக்கின்றன என்கின்றார் உறுதியுடன்.

இவரது இன்னொரு சாதனை ஒரு மொழியில் எழுதப்பட்ட ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டு உலகின் அனைத்து மொழிகளிலும் (இலக்கணச் சுத்தமாக) கம்பியூட்ர் மூலம் மொழி பெயர்த்து பெற முடியும் என்பதுதான்.

கம்பியூட்டரில் ஏற்கனவே புரோகிராம் செய்து வைக்கவேண்டியதும மட்டும் என்னுடைய பொறுப்பு இதற்காக வெளி நாடுகளில் இருந்தும் நிறைய அழைப்புக்கள் வந்தன. என் சாதனை தமிழகத்திற்குத் தான் முதலில் பயன்பட வேண்டும் என்பதால் அந்த அழைப்புக்கெல்லாம் நான் செவிசாய்க்க வில்லை.....என்கின்றார் சாத்தூர் சேகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசி

# சேலைச் சோலை



- சேட்டிங் - சூட்டிங்
- சேட்ஸ்
- ஸ்கேட் & பிளவுஸ்
- கவுண்
- சல்வார் கிற்
- இந்தியன் சாரி வகைகள்
- பேபி சூட்
- சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற றெடிமேட் ஆடைகள்

**சேலைகளின் சோலை**

**பட்டுப்பிடவைகளின் சாம்ராஜ்யம்**

**57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

**தொ.பே. 021-2222503**

ஸ்ரீராம் ஒவ்(f)செற் பிறின்ரேர்ஸ், 250, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org